

5 / 27 | 1946 பிப்ரவரி 10 | பார்த்திப தை 28உ

கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்களும், சம்பவங்களும் கற்பனையே.

நீங்கள் இன்று
மக்லீன் ஸால்
பல் துலக்கி
னீர்களா?





துலக்கினேன்.
கடற்படையில் நாங்கள்
அப்பழுக்கின்றிதான்
இருப்பது.



எல்லா
கெமிஸ்டுகளிட
மும், ஸ்டோர்களிலும்
கிடைக்கும்

Copyright.

J.W.T.(E.) LTD.

MT. 6049

வெஜிடபில் கதம்ப ஊறுகா



வெள்ளரிக்காய், இஞ்சி, பாவக்
கீரைத்தண்டு, வாழைத் தண்டு,
ரிக்காய், பச்சை மிளகாய், ப
மிளகு — சொல்லும்போதே வா
ஜலம் ஊறுகிறது — முதலி
சேர்த்து கைபடாமல் ஜிஞ்ஜா
மாகத் தயாரிக்கப்பட்டது. வா
வெகு ஜோர். உடம்பிற்கு பரம
இன்றே உங்கள் தேவைக்கு
வும். இரு சைஸ்களில் கிடை

●

தயாரிப்பவர்கள்:

டி. எஸ். ஆர். & கோ

வாஸனை திரவிய வியாபா
கும்பகோணம்

மதராஸ் ஸிடி ஏஜெண்டுகள்:

மெஸர்ஸ். புஷ்பவனம் ஸ்டோ
பைக்ராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கே

ஸ்டாக்கிஸ்டு:

B. பாலபட்டாபி,
வைசியாள் தெரு, கோயமுத்தூ



கல்கி

...ர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடிப் பாப்பா —பாரதியார் } இதழ் 27

என்ன சேதி?

...வுக்கு யோகம்!

சென்ற ஜனவரி மாதம் 31-ம் தேதி
...க்கும் சீன மக்களுக்கும் ஆசியாவுக்
-பொதுவாக உலகத்துக்கும் ஒரு சுப
...ாகும். அன்றைய தினம் சீனா ஒரு
...ய அதிசயத்தை, சென்ற இருபது
... காலமாகக் கண்டறியாத ஒரு மகத்
... தலை சிறந்த அற்புதத்தைச் செய்
...கிறது. அன்றைய தினம் முதல்
...து கோடி சீன மக்களும் ஒற்றுமை
...யும் சமாதானமாகவும் வாழ்வ
...து முடிவு செய்திருக்கிறார்கள்!
...தரர்களோடு சகோதரர்கள்
...ட போடுவதில்லை யென்று திட
...பம் செய்திருக்கிறார்கள். சென்ற
...து வருஷகாலமாக அவர்களோடு
... பிறந்தே கொல்லும் வியாதியைப்
... வாழ்ந்து வந்த உள்நாட்டுக் கலகத்
..., துவேஷத்துக்கு, பகைமை யுணர்ச்
... நல்ல நாள் பார்த்து விடை
...த்து அனுப்பிவிட்டார்கள்.

...த்தகைய மகத்தான அற்புதம்
...டி சேர்ந்தது? யாரால் சேர்ந்தது?
...த்திய சர்க்கார் தலைவராகிய சியாங்
... ஷேக் ஒருவர்; ஏனான் பொது
...மை சர்க்கார் தலைவராகிய மா சி துங்
...ருவர். இந்த இருவரும் பரஸ்பரம்
...க் கொடுத்து ஒற்றுமைப்படுவது
... முடிவு செய்ததுதான் காரணம்.
...துவரை சியாங் கை ஷேக், "சீனா
...காமின்டாங் என்று வழங்கும் ஒரே
...யல் கட்சிதான்; வேறு கட்சி இடை
..." என்று சொல்லி வந்தார். இனி
... சீனாவில் வெவ்வேறு அரசியல்
...கள் சுதந்திரமாக இயங்கலாமென்று
... இடங்கொடுத்திருக்கிறார். அதோடு
...துவுடைமைக் கட்சிக்காரர்களையும்
...துக் கொண்டு கூட்டுச் சர்க்கார்
...க்கவும் ஒத்துக்கொண்டிருக்கிறார்.

...ாதுவுடைமைத் தலைவரோ, தம்
...ய கட்சிக்கு உட்பட்டிருந்த தனி
...யத்தைச் சீன அரசாங்க சைன்யத்
துடன் சேர்த்து ஒரே சைன்யமாகச் செய்ய இசைந்திருக்கிறார். ஆகவே சீனாவில் இனிமேல் சியாங் கை ஷேக் சர்க்காரின் ஏகபோக ஆட்சிக்கு இடம் இல்லை. உள் நாட்டுக் கலகத்துக்கும் அங்கே இடமில்லை.

மற்றொரு ஆவல்

சீனாவுக்கு நல்ல காலம் பிறந்து, அங்கே ஒற்றுமை உதயமாகி அந் நாடு ஜன நாயகத்தை நோக்கி விரைந்து செல்கிறது என்பதை அறியும்போது, நம்முடைய மனதிலே மறைமுகமாக ஓர் ஆவல் உண்டாகிறது. நமது இந்தியாவிலும் அந்த மாதிரியாக ஹிந்து-முஸ்லிம்களுக்குள் ஒற்றுமை ஏற்பட்டு ஒரு தேசிய சர்க்காரும் ஸ்தாபிதமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இருபது வருஷகாலமாக ஒருவர்மேல் ஒருவர் பகைமை பூண்டு சொந்தச் சகோதரர்களைக் கொலை புரிந்து வந்த சீனக் கட்சிகள் இரண்டும் இன்று நேச பாவத்துடன் கை குலுக்கும்போது, இந்தியாவில் ஹிந்து - முஸ்லிம்கள் ஒற்றுமையாக வாழ்வதற்கு வழி இல்லையா?

பொதுவுடைமைக்காரர்களை வேட்டையாடுவதையே பொழுது போக்காகக் கொண்ட சியாங் கை ஷேக்கும், சியாங் கை ஷேக்கைக் கண்ணாலே காண்பதே மகா பாவம் என்று வெகு தூரத்துக்கப்பால் ஓடி, ஏனானில் சர்க்காரை ஸ்தாபித்துக் கொண்ட சீனப் பொதுவுடைமைக்காரர்களும் ஒரு சமரச முடிவுக்கு எப்படி வந்தார்கள்? அதற்கு முக்கிய காரணம், மறதி என்னும் அரிய குணமே யாகும். இரு தரப்பினரும் பரஸ்பர கோப தாபங்களையும் சொந்த மனஸ்தாபங்களையும் சென்ற கால விருப்பு வெறுப்புக்களையும் தேசத்தின் நன்மைக்காக மறந்து விட்டார்கள்! அத்தகைய மறதி—சர்வ வல்லமை வாய்ந்த மறதி-இந்தியாவையும் ஆட்கொள்ளுமா?

காங்கிரஸ் தலைவர்களைப் பொறுத்த வரையில் அப்படி மறப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

ஸிந்து மாகாணத்தில் "லீக்குடன் சேர்ந்து கூட்டு அரசாங்கம் ஸ்தாபிக்கத் தயார்!" என்று மௌலானா ஆஸாது கேற்றுக்கூடச் சொல்லி யிருக்கிறார். ஜனாப் ஜின்னாவும் அம்மாதிரி தேசிய முஸ்லிம்களின் மீது தமக்குக்குள்ள வெறுப்பை மறப்பதற்குத் தயாரானால், சிறுவுக்குக்குப் பிறந்த யோகம் இந்தியாவுக்கும் பிறந்துவிடும்.

சர்க்கார் அதிதி

நாளது 1946-ம் வருஷம் ஆரம்பமானதும் தென்னிந்தியர்கள் மகாத்மாஜியின் விஜயத்தை ஆவலாக எதிர்பார்த்தார்கள். ஆனால், சென்னை சர்க்காரோ வேறொரு அதிதியை வெகு ஆவலாக எதிர்பார்க்கிறார்கள். அந்த அதிதியின் திருநாமம் ஸ்ரீமான் பஞ்சம்.

ஸ்ரீமான் பஞ்சத்தை வரவேற்பதற்காக இந்திய சர்க்கார் செய்யும் ஏற்பாடுகளில் வெளி நாட்டுக்கு ஒரு தூது கோஷ்டியை அனுப்புவதும் ஒன்றாகும்

இந்திய மக்களுக்கு வேண்டிய உணவில் இந்த வருஷம் துண்டு விழும் என்று எதிர்பார்க்கப்படும் 30 லட்சம் டன் தானியத்தை வெளிநாடுகளிலிருந்து கொண்டு வருவதற்காக அந்தத் தூது கோஷ்டி போகிறது. அதிலே சேர்ந்து நமது மாகாணத்துக்காக ஸர் எஸ். வி. ராமமூர்த்தி போகிறார்.


இனிமேல் இந்த மாகாணத்தில் நில[illegible]மும் ஜலமும் உணவுப்பொருள் உற்ப[illegible]திக்குத்தான் முதலில் உபயோகிக்க[illegible]படும் என்பதாகவும் நமது அட்வைஸ[illegible] சர்க்கார் சார்பாக ஸர் எஸ். வி. ரா[illegible]மூர்த்தி சென்ற வாரத்தில் தெரிய[illegible]படுத்தி யிருக்கிறார்.

"அன்னுத் பிராண:" என்று வேதங்கள் முறையிட்டிருந்தும், "அன்ன மய[illegible] பிராண மயம்" என்னும் பழமொழி[illegible] எத்தனையோ காலமாக வழங்கி வந்தும் உணவுப் பொருள் உற்பத்தியை முதலி[illegible] கவனிக்க வேண்டும் என்கிற யோசனை நமது அதிகார வர்க்க சர்க்காருக்கு[illegible] தோன்றுவதற்கு இத்தனை கால[illegible] ஆகி யிருப்பது விந்தையே யல்லவா?

எது எப்படி யிருந்த போதிலும், பஞ்சத்தைத் தடுப்பதற்காகச் செய்யப்படு[illegible] மேற்படி முயற்சிகள் எல்லாம் தக்க பல[illegible] தரவேண்டுமென்று கடவுளைப் பிரார்[illegible]திக்கிறோம். ஏனெனில், பஞ்சத்தின் பய[illegible]கரம் ஒரு புறமிருக்க, அந்தப் பஞ்சத்தை[illegible] வரப்போகும் பொதுஜன சர்க்காரின் தலையில் பரிசாகச் சுமத்தி விட்டு இப்[illegible]போதுள்ள அட்வைஸரி சர்க்கார் 'டிமிக்கி' கொடுத்து விட்டுப் போவது, அதை[illegible] விடப் பெரிய பயங்கர மாகுமல்லவா!

நிகழ்ச்சிச் சித்திரம்-












ருஷியாவுக்கும் ஈரானுக்கும் ஏற்பட்டிருக்கும் தகராறை அந்த நாடுகளே தங்களுக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் ஆனல் சமாதானப் பேச்சின் போக்கைப்பற்றி அவ்வப்போது தெரியப்படுத்த வேண்டுமென்றும் ஐக்ய தேச மகா சபை தீர்மானித்திருக்கிறது.

-உம்மன்


ஜனங்கள்
அதிகாரவர்க்கம்
பஞ்சம்
"பஞ்சத்தைப்போன்ற பெரும் ஆபத்தை எதிர்த்துப் போராட விரும்பும் எந்த சர்க்காருக்கும் பொதுஜனங்களின் ஆதரவு வேண்டும்" என்று உணவு இலாகா அங்கத்தினர் ஸர் ஸ்ரீவத்ஸவா கூறினார்.


…ம், சர் ஜே.பி.ஸ்ரீவத்ஸவா "மழை பெய்யும்படியாக நான் சட்டம் செய்ய முடியாது" என்கிற
…ர்வ உண்மையை வெளிப்படுத்தினார். ஆனால் வைஸ்ராயைக் கேட்டுப் பார்க்கலாமல்லவா?
"ஒரு நல்ல மழை பெய்யவேண்டுமென்று தயவுசெய்து ஓர் அவசரச் சட்டம் போடுங்களேன்!"
ஸ்ரீவத்ஸவா
வேவல்


மந்திரிசபை
சிந்து, அஸ்ஸாம் நிலைமையைப் பார்த்த பிறகு நவாப்ஸாடா லியாகத் அலிகான் "மந்திரிசபைகளை அமைப்பதில் முஸ்லிம் லீகுக்குச் சிரத்தை இல்லை" என்று தெரியப்படுத்தி யிருக்கிறார்.


"சீச்சீ! இந்தப்பழம் புளிக்கும்!
தின்றவன் வாயெல்லாம் இனிக்கும்!"
நவாப் ஸாடா லியாகத் அலிகான்

பிறந்த பயன் பெற்றோம்!

மகான் என்று சொன்னார்கள்; சத்தி
ம் தவறாத உத்தமர் என்று சொன்
ர்கள்; பாரத தேசத்தை வாழ்விக்க
ந்த பரம புருஷர் என்று பாராட்டி
ர்கள்; தியாகமே உருவெடுத்தவர்
ன்று பரவசப்பட்டார்கள்; உலகம்
ய்ய வந்த அவதார மூர்த்தி என்று
ால்லி ஆனந்தப் பட்டார்கள்.

அப்பேர்ப்பட்டவரைத் தமிழர்க
ாகிய நாம் இதயம் நிறைந்த அன்
பாடு வரவேற்றோம். கங்குகரையில்
்த உற்சாகத்துடன் நல்வரவு கூறி
னும் நமது முன்னோர் செய்த புண்ணி
த்தினால் வந்த அதிதி என்று எண்ணி
பசரித்தோம். அவருடைய பிரார்த்
னக் கூட்டங்களுக்குச் சென்று அவ
டைய விருப்பத்தின்படி ராமநாம
ஜனை செய்தோம். ஹிந்துஸ்தானி
ாசாரம், ஹரிஜன சேவை முதலிய
நப்பணிகளுக்காகக் காலணா முதல்
யிரக்கணக்கான ரூபாய் வரையில்
ணயும் கொடுத்தோம்.

அதிதி, எல்லா உபசாரங்களையும்
ரவேற்புகளையும் பெற்றுக் கொண்
ர்; காலணாக்களையும் ரூபாய்களை
் கணக்குப் பார்த்து எடுத்துக்
ாண்டார்.

தமிழ் நாட்டில் பதினைந்து நாள்
ருந்து விட்டுத் திரும்பிச் சென்றார்.

ஆனால், போகும் போது வெறுமனே
ன்றாரா? — இல்லை!

ஒரு பெரிய கொள்ளையுடனே திரும்
் சென்றார்!

தமிழ் மக்களின் இருதயங்களை
வர்கள் அறியாமலே கொள்ளை
ாண்டு போய் விட்டார்!

பெரிய கொள்ளைக்காரர் அவர்!

• • •

சென்ற 3ஆ. ஞாயிற்றுக்கிழமை
லை பத்து மணி சுமாருக்கு, மதுரை
நகரின் பிரசித்திபெற்ற ஆலயத்தில்
ழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சுந்தரேசப்
ருமானின் நெஞ்சம் திக், திக் என்று
டித்துக்கொண்டது. அவருடைய
் நாடி நிமிஷத்துக்கு 300 தடவை
கத்தில் பட் பட், பட் பட் என்று
டித்துக் கொண்டது.

ாரணம், ஸ்ரீ மோகனதாஸ் கரம்
ிர காந்தி ஒருவேளை தம்முடைய
ந்நிதிக்கு வராமலே போய் விடு
ரோ, அவருடைய திருநாமத்தினால்
நமக்கு ஒரு அர்ச்சனை—தீபாராதனை
கிடைக்காமல் போய்விடுமோ என்ற
பயம்தான்!

மகாத்மா காந்தி ஸ்ரீ மீனாக்ஷி அம்மன் தரிசனத்துக்குப் பிறகு, "கூட்டமும் நெருக்கடியும் அதிகமாயிருக்கிறதே! மீனாக்ஷி அம்மன் தரிசனத்தோடு திருப்தியடைந்து வெளியேறி விடலாமே?" என்று பக்கத்திலிருந்தவர்களிடம் சொன்னது, சர்வாந்தர்யாமியான ஸ்ரீ சுந்தரேசுவரர் காதில் விழாமல் இருந்திருக்குமா?

நல்ல வேளையாக, ஆலய நிர்வாகிகளும் அருகிலிருந்தவர்களும் வற்புறுத்தியதின் பேரில் மகாத்மாவின் மனம் மாறியது. ஸ்ரீ சுந்தரேசுவரர் சந்நிதிக்கும் வரத்தான் செய்தார். ஸ்ரீ மீனாக்ஷி அம்மனைத் தர்ம பத்தினியாகப் பெறும் பாக்கியம் செய்த பெருமானுக்கு மகாத்மா காந்தியைத் தமது சந்நிதியிலே பார்க்கும் பாக்கியமும் கிடைத்தது!

• • •

மேற்கண்டவாறு நாம் எழுதியதில் ஸ்ரீ சுந்தரேசுவரப் பெருமானைப் பற்றிக் குறைத்துச் சொல்லி விட்டதாகவோ, தெய்வ நிந்தனை செய்து விட்டதாகவோ தயவு செய்து யாரும் எண்ணிக் கொள்ள வேண்டாம்.

பக்தர்கள் பகவானைத் தேடிச் செல்வதற்குப் பதிலாக, பகவான் பக்தர்களைத் தேடிச் சென்றதாக நமது இதிகாசங்களிலும் புராணங்களிலும் நாம் எத்தனையோ சம்பவங்களைப் படித்திருக்கிறோம்.

அவ்விதம் உண்மைப் பக்தர்களைத் தேடிக் கொண்டு செல்வதும், வலிந்து சென்று தடுத்தாட்கொள்வதும் இறைவனுடைய சிறப்பான இலட்சணம் என்று நமது சமய நூல்கள் கூறுகின்றன.

இதை வைத்துக் கொண்டு பார்க்கும் போது, மகாத்மா காந்தியைப் போன்ற பக்தரைப் பார்ப்பதற்கு, தமது சந்நிதிக்கு அவரை வரவழைப்பதற்கு, ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி விருப்பம் கொள்வதில் வியப்பு ஒன்றும் இல்லையல்லவா?

ஆம்; ஸ்ரீ மீனாக்ஷி அம்மன், ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி, ஸ்ரீ பழனி ஆண்டவர் ஆகிய தமிழ் நாட்டின் பழம் பெரும் தெய்வங்கள் மூவரும் காந்தி மகான்

தங்கள் ஆலயத்துக்கு வந்து தங்களைத் தரிசித்ததில் எல்லையில்லா மகிழ்ச்சியும் பெருமிதமும் அடைந்திருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.

தெய்வங்களின் மகிழ்ச்சி ஒருபுறமிருக்க, அத் தெய்வங்களின் காரணமாகத் தமிழ் நாட்டு மக்கள் பெறற்கரிய பேற்றை அடைந்தார்கள். உலகத்தில் சிறந்த உத்தம புருஷரைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றார்கள்.

இத்தகைய பாக்கியத்தைத் தங்களுக்கு அளித்ததின் பொருட்டுத் தமிழ் மக்கள் மேற்கூறிய மூன்று தமிழ் நாட்டு சுவாமிகளுக்கும் மிக்க நன்றிக் கடன்பட்டிருப்பதோடு கூட, நமது ஹரிஜனசங்கக் காரியதரிசி ஸ்ரீ எஸ். என். கோபாலசுவாமிக்கும் ஓரளவு கடமைப் பட்டிருக்கிறார்கள்.

ஹிந்துஸ்தானி பிரசார சபையின் வெள்ளி விழாவை முன்னிட்டு மகாத்மாவின் சென்னை விஜயம் நிச்சயமானவுடனே ஸ்ரீ எஸ். என். கோபாலசுவாமி மகாத்மாவிடம் போய்ச் சேர்ந்தார். ராஜாஜியினால் ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட்ட தென்னாட்டின் பிரசித்த ஆலயங்களாகிற மதுரைக் கோவிலுக்கும் பழனிக் கோவிலுக்கும் மகாத்மா விஜயம் செய்ய வேண்டுமென்று விண்ணப்பம் போட்டார். ஹரிஜன விடுதலையும் மகாத்மாவின் மனதுக்கு உகந்த முக்கிய காரியமானபடியால் ஸ்ரீ கோபாலசுவாமியின் விண்ணப்பத்தைத் தட்ட முடியாமல் மகாத்மா ஒப்புக்கொண்டார்.

அதன் பயனாகவே தமிழ்நாட்டு மக்கள் சுமார் முப்பது லட்சம் பேர் மகாத்மாவைக் கண்ணாரக் கண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்து "பிறந்ததினால் பெற்ற பெரும் பயனை இன்று அடைந்தோம்" என்று மகிழ்தல் சாத்தியமாயிற்று.

* * *

காந்தி மகாத்மா இறைவனை வழிபடுவதற்கு ஆலயம் இன்றியமையாதது என்று கருதுவதில்லை. நீலவானத்தை மேல் மண்டபமாகவும், வான முகடுகளையே மதின் சுவர்களாகவும் கொண்ட திறந்த வெளியே கடவுளை வழிபடுவதற்குச் சிறந்த இடம் என்று கருதுபவர். அதோடு, எங்கும் நிறைந்த பெருமானைத் தமது உள்ளத்திலேயே தரிசித்துப் பூஜை செய்வதையே சிறந்த பூஜை முறையாகக் கருதுகிறவர். ஆகையால் காந்திஜியின் யாத்திரைகளில் சாதாரணமாக அவர் ஆலயங்களுக்குப் போவதில்லை. ஆனாலும், அவர் இவ்வளவு தேக சிரமத்தையு பொருட்படுத்தாது மதுரை — பழன யாத்திரையை மேற்கொண்டார்.

போகும் வழியில் பேச நேர்ந் போதெல்லாம் "மதுரை—பழனி ஆ யங்களை ஹரிஜனங்களுக்குத் திறந் விட்ட காரணத்தினால்தான் அந் ஸ்தலங்களுக்கு நான் யாத்திர போகிறேன்" என்று மகாத்மா சொல்லி கொண்டே போனார். அதுமட்டு மல்ல மல், ஸ்ரீரங்கத்தில் தாம் இறங்கி அந் ஊரின் பிரசித்தி பெற்ற ஆலயத்துக்கு போகாததற்குக் காரணம் அந்த ஆலய ஹரிஜனங்களுக்குத் திறந்து விடப்பட ததுதான் என்றும் ஸ்பஷ்டமாகத் தெ வித்தார்.

இதிலிருந்தெல்லாம் ஹரிஜன ஆ யப் பிரவேசத்தை மகாத்மா எவ்வள முக்கியமான காரியமாகக் கருதுகிறா என்று தெரிகிறது.

• • •

"ஏன் மகாத்மா காந்தி அப்படி கருதுகிறார்?

ஆலயங்களை ஹரிஜனங்களுக்கு திறந்துவிடுவது அவ்வளவு என் முக்கியம்? திறந்து விடாவிட்டா என்ன மூழ்கிப் போய்விடும்?

இந்தியாவின் சுதந்திரம் அல்லவ முக்கியமான விஷயம்?

வெள்ளைக்காரர்களை விரட்டு தல்லவா அவசரமான காரியம்? ......

குறுகிய திருஷ்டி படைத்தவர்களு சுயநலத்தினாலோ அதிகார மோகத் னாலோ கண்மூடிப் போனவர்களு மேற்கண்டவாறெல்லாம் கேட்பார்கள்

ஆனால் தீர்க்கதரிசியும், ஞானக் க பெற்றவருமான மகாத்மாவோ, இந் யாவின் அரசியல் விடுதலை எவ்வள முக்கியமோ அவ்வளவு முக்கியமான ஹரிஜனங்களின் சமூக விடுதலை என் கருதுகிறார். இந்தியாவின் சுதந்திரமு ஹரிஜன முன்னேற்றமும் ஒன்றோ டொன்று பிணைந்து பின்னிக் கிடக்கு விஷயங்கள் என்று நம்புகிற "ஹரிஜன விடுதலையின்றி இந்தி வின் விடுதலை கிட்டாது; அப்படி கிடைத்தாலும் அதை நீடித்து நி நாட்ட முடியாது!" என் எண்ணுகிறார்.

• • •

பாரதநாடு பழம் பெரு நாடு எ பதில் சந்தேகமில்லை. இந்த நாட்டி பதினாயிரம் வருஷங்களுக்கு மு மகரிஷிகள் உருவமற்ற பரம்பொரு

உள்ளத்தின் ஒளியால் கண்டு வேத சாஸ்திரங்களையும் உபநிஷத மகா மந்திரங்களையும் அருளினார்கள்.

இந்தப் புண்ணிய பூமியில் எத்தனையோ வீராதி வீரர்கள் தோன்றினார்கள். அவதார புருஷர்கள் உற்பவித்தார்கள். பத்தினித் தெய்வங்கள் வாழ்ந்தார்கள்.

கல்விக்கும் கலைகளுக்கும் இந்தப் புண்ணிய பூமி நிலைக்களமாயிருந்தது. செல்வமும் சிறப்பும் இந் நாட்டில் குடிகொண்டு விளங்கின.

அப்பேர்ப்பட்ட தேசம் ஏன் அவ்வளவு சுலபமாக அன்னியர்களுக்கு அடிமைப் பட்டது? வீராதி வீரர்களுக்குப் பிறப்பளித்த இந்த நாடு ஏன் சில ஆயிரம் அன்னியர்களுடைய படையெடுப்புக்குப் பணிந்து அரசியல் சுதந்திரத்தை இழந்தது?

எவ்வளவோ உயர் நலங்கள் பொருந்திய இந்தியாவிலும் ஹிந்து சமூகத்திலும் ஏதோ ஒரு குறைபாடு இருக்கத்தான் வேண்டும். நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்ததுபோல் ஏதோ ஒரு பொல்லாங்கு புரையோடியிருக்கத்தான் வேண்டும்.

இதைக் குறித்து முன்னாளிலும் இந்நாளிலும் இந்தியாவில் தோன்றிய பெரியோர்கள் பலர் எச்சரித்திருக்கிறார்கள். ஸ்ரீ ராமானுஜர் முதல் சுவாமி விவேகானந்தர் வரையில் மகான்கள் பலர் சாதி வேற்றுமையையும் தீண்டாமையையும் தகர்த்தெறிந்து ஹிந்து சமூகத்தைக் காப்பாற்ற முயற்சித்திருக்கிறார்கள்.

அவர்கள் எல்லாரும் கண்ட உண்மையைத்தான் காந்தி மகானும் தமது தீர்க்க திருஷ்டியால் கண்டார்.

சமூகத்தில் இப்பேர்ப்பட்ட ஒரு பெரிய குறையை, கொடிய வியாதியை வைத்துக்கொண்டு, அரசியல் சுதந்திரத்துக்கு என்னதான் பாடுபட்டாலும் முழு வெற்றி ஏற்படாது என்பதை உணர்ந்தார். அப்படியே அரசியல் சுதந்திரம் வந்தாலும் இத்தகைய குறைபாடு இருக்கும் வரையில் கிடைத்த சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியாது என்பதை உணர்ந்தார்.

எனவே, ஒரு பக்கம் அரசியல் சுதந்திர இயக்கத்தை நடத்திக்கொண்டே மற்றொரு பக்கம் இந்தச் சமூகக் குறைபாட்டை ஒழிக்கவும் பெரும் பிரயத்தனம் தொடங்கினார். அந்தப் பிரயத்தனத்தில் மகாத்மா காந்தி முன்னே யாரும் அடையாத வெற்றியை அடைந்திருக்கிறார் என்பதைப் பிரத்யட்சமாய்ப் பார்க்கிறோம்.

"கனவிலும் நடவாது" என்று கருதப்பட்ட காரியங்கள் நம் கண் முன்னே நடந்து வருவதைக் காண்கிறோம்.

மகாத்மாவின் தீர்க்க திருஷ்டி வாய்ந்த இந்தப் பெரும் பிரயத்தனத்தில் அவருக்குப் பெரிதும் பலம் அளித்துத் துணைபுரிந்த பெருமை நமது செந்தமிழ் நாட்டுக்கு உரியது. இதைக் குறித்துத் தமிழ் மக்கள் பெருமித குதூகலம் அடைவது நியாயமேயாகும்.

* * *

தமிழ் நாட்டுக்கும் காந்தி மகாத்மாவுக்கும் எப்போதுமே அந்நியோந்நியமான சிறந்த உறவு உண்டு. அந்த உறவு இந்தத் தடவை அவருடைய விஜயத்தினால் இன்னும் பலமடைந்து உறுதிப் பட்டிருக்கிறது.

ஆகையினால்தான் மகாத்மா இன்னொரு தடவையும் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்யத் தமது விருப்பத்தைத் தெரிவிக்கிறார். அப்படி வரும்போது, தமிழ் பாஷையை நன்றாகக் கற்றுக் கொண்டு வருவதாகவும் சொல்லியிருக்கிறார்.

இந்த வாக்குறுதியை மகாத்மாவுக்கு அடிக்கடி ஞாபகப் படுத்திக் கொண்டிருப்பது நமது கடமையாகும்.

* * *

ஒவ்வொரு பாஷைக்கும் பிரத்யேகமாக உரிய சில நயங்கள் இருக்கின்றன.

தமிழ் மொழியில் நாம் அதிதிகளுக்கு விடை கொடுத்து அனுப்பும் முறை விசேஷ நயம் பொருந்தியது.

அதிதிகளுக்கு விடை கொடுக்கும் போது நாம் "போங்கள்!" என்று சொல்வதில்லை.

"போய் வாருங்கள்!" என்றுதான் சொல்லுவோம்.

நானது 1946-ம் வருஷ ஆரம்பத்தில் தமிழ் நாட்டுக்கு விஜயம் செய்த ஒப்பற்ற மாபெரும் அதிதிக்கும், "போய் வாருங்கள்" என்றுதான் தமிழர்கள் விடை கொடுத்தனுப்பினார்கள்.


இதைத் தமிழ் மரபின்படி உபசாரமாக மட்டும் சொல்லாமல், உண்மையாகவே, "மகாத்மா தமிழ்நாட்டுக்கு மீண்டும் வரவேண்டும்!" என்று தெரியப்படுத்தினார்கள்.

அந்த நன்னாள் கூடிய சீக்கிரத்திலே வர வேண்டுமென்று இரண்டு கோடி தமிழ் மக்களோடு சேர்ந்து நாமும் வேண்டிக் கொள்கிறோம்.

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்றவர்: எம். எஸ். துரைசாமி, ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பு, நேஷனல் காலேஜ், திருச்சி.

சிவகாமியின்





கல்கி

அத்தியாயம் 19

தமக்கையும் தம்பியும்

அன்று சூரியாஸ்தமனம் ஆன பிறகு வானமாதேவி தன்னுடைய விலைமதிப்பில்லா ஆபரணங்கள் பத்திரமாக வைக்கப்பட்டிருந்த அறையில் வெள்ளிப் பெட்டிகளையும் தங்கப் பெட்டிகளையும் திறந்து எதையோ தேடிக் கொண்டிருந்தாள்.

திடீரென்று "அக்கா! என்ன தேடுகிறாய்?" என்ற குரலைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

அவளுக்குத் தெரியாமல், ஓசை உண்டாக்காமல், அந்த அறைக்குள் நெடுமாறன் பிரவேசித்திருந்தான்.

அவனைக் கண்டதும் வானமாதேவியின் திகைப்பு அதிகமாயிற்று.

"அக்கா! என்ன தேடுகிறாய்?" என்று நெடுமாறன் மறுபடியும் கேட்டான்.

மறுமொழி சொல்ல முடியாமல் வானமாதேவி கொஞ்சம் தடுமாறி விட்டு, "தம்பி! நீ எப்போது இங்கே வந்தாய்?" என்றாள்.

"நான் வந்து சிறிது நேரமாயிற்று. ஒருவேளை இந்தக் கத்தியைத் தேடுகிறாயோ என்று கேட்பதற்காக வந்தேன்!" என்று சொல்லிக் கொண்டே பின்புறமாக மறைத்து வைத்துக் கொண்டிருந்த ஒரு சிறு கத்தியை நெடுமாறன் நீட்டினான்.

வானமாதேவி அந்தக் கத்தியை வெறித்துப் பார்த்தவாறு நின்றாள். அவளுடைய முகத்தில் முத்து முத்தாக வியர்வைத் துளிகள் துளித்து நின்றன.

"அக்கா! என்னைக் கத்தியால் குத்திக் கொல்வதாக முடிவாகத் தீர்மானித்திருந்தாயானால், இதை வாங்கிக் கொண்டு இப்போதே அந்தக் காரியத்தைச் செய்து விடு! வீரத்துக்குப் பெயர்போன பாண்டிய குலத்திலே பிறந்து பல்லவ குலத்திலே வாழ்க்கைப் பட்ட வானமாதேவி தன் அருமைச் சகோதரனைத் தூங்கும்போது கத்தியால் குத்திக் கொல்வது அழகாயிராது! பிறந்த குலம், புகுந்த குலம் இரண்டுக்கும் அதனால் இழுக்கு உண்டாகும்!......"

பரிகாசமும் பரிதாபமும் கலந்த குரலில் நெடுமாறன் கூறிய மேற்படி வார்த்தைகளைக் கேட்ட வானமாதேவியின் உள்ளம் என்ன பாடுபட்டது என்பதைச் சொல்ல முடியாது. ஒரு பக்கம் அவமானமும் ஆத்திரமும் அவளைப் பிடுங்கித் தின்றன. மற்றொரு புறம் கோபமும் ஆத்திரமும் பொங்கின.

எவ்வளவோ முயன்றும், அவளுடைய வாயிலிருந்து ஒரு வார்த்தையும் வரவில்லை. நெடுமாறன் மேலும் கூறினான் :—

"அல்லது ஒரு வேளை விஷங் கொடுத்து என்னைக் கொல்லுவதாகத் தீர்மானித்திருந்தாயானால், கொடுக்கிற விஷம் நிச்சயமாய்க் கொல்லக்கூடியது தானா என்று தெரிந்துகொண்டு கொடு. நமசிவாய வைத்தியருக்கு விஷத்தைப் போக்கத்தான் மருந்து கொடுக்கத் தெரியுமே யொழிய, பளிச்சென்று கொல்லக்கூடிய நல்ல விஷம் கொடுக்க

அவருக்குத் தெரியாதென்று தோன்றுகிறது. அவரிடம் நீ எவ்வளவோ சிரமப்பட்டு வாங்கி வைத்திருந்த விஷத்தை அரண்மனைத் தோட்டத்தில் உள்ள மான் குட்டிக்குக் கொடுத்துப் பார்த்தேன். அது உயிரை விடும் வழியாகக் காணப்படவில்லை. முன்னை விட அதிகமாகவே துள்ளி விளையாடுகிறது!"

நெடுமாறனுடைய வார்த்தை ஒவ்வொன்றும் விஷந்தோய்ந்த அம்பைப் போல் வானமாதேவியின் நெஞ்சில் பாய்ந்து அவளைக் கொல்லாமல் கொன்றது.

அந்த வேதனையை மேலும் பொறுக்க முடியாதவளாய், தயங்கித் தயங்கி, "தம்பி! இதெல்லாம் என்ன பேச்சு? நானாவது உன்னைக் கொல்லவாவது?............" என்றாள்.

"அக்கா! பல்லவ குலத்தில் வாழ்க்கைப்பட்டதற்குப் பொய்யும் புனைசுருட்டும் கற்றுக் கொண்டு விட்டாயா? நேற்றிரவு புவனமகாதேவியிடம் யோசனை கேட்கப் போனாயே? அவர் இந்த யோசனைதான் சொல்லிக் கொடுத்தாரா?" என்றான் நெடுமாறன்.

வானமாதேவிக்கு அவனுடைய அத்திரத்தை யெல்லாம் பிரயோகிக்க இப்போது ஒரு வழி கிடைத்தது.

கடுமை நிறைந்த குரலில், "நான் நினைத்தபடியே ஆயிற்று! இதையெல்லாம் உனக்குச் சொன்னது அந்தச் சோழ நாட்டுப் பெண்தானே?" என்றாள்.

"அந்தப் பேதைப் பெண்மீது உன் ஆத்திரத்தைக் காட்ட வேண்டாம், அக்கா அவள் அதற்குப் பாத்திரமில்லாதவள். சற்று முன்னால் அவள் என்னிடம் இதைப் பற்றிப் பிரஸ்தாபித்தது உண்மைதான். ஆனால், இந்தக் கத்தி காணாமற்போனது இன்னறக்கல்லவே? இரண்டு நாளாக இதை நீ தேடுகிறாய் அல்லவா!"

வானமாதேவி மீண்டும் சிறிது நேரம் திகைத்து நின்றுவிட்டு, "சமண சித்தர்களால் அறிய முடியாதது ஒன்றுமில்லை போலிருக்கிறது!" என்றாள்.

"ஆனால் உன்னுடைய மனதிலுள்ளதை அறிவதற்குச் சித்தர்களின் சக்தி தேவையில்லை, அக்கா! பாவம்! நீ கள்ளங்கபடு அறியாதவள். வள்ளுவர் பெருமான்,

"அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம்"

என்று சொன்னாரே, அது உன்னைப் பற்றியேதான் சொன்னதாகத் தோன்றுகிறது. உன் மனதிலுள்ள எண்ணத்தை உன்னுடைய முகமே எனக்குக் காட்டிவிட்டது. மேலும், நான் கண் குருடாகவும் காது செவிடாகவும் பிறக்கவில்லையே? இந்த அரண்மனைக்கு வந்ததிலிருந்து என் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக் கொண்டுதானிருக்கிறேன். உன் இடுப்பிலே இந்தக் கத்தியை நீ சதா செருகி வைத்துக் கொண்டிருப்பதையும் பார்த்தேன். அதை நீ ஒரு தடவை ஞாபக மறதியாகத் தரையில் வைத்தாய். உனக்குத் தெரியாமல் அதை எடுத்துக் கொள்வதில் எனக்கு எவ்வித சிரமமும் ஏற்படவில்லை..."

"ஆகா! எப்பேர்ப்பட்ட அசடு நான்?" என்று முணுமுணுத்தாள் வானமாதேவி.

"நீ அசடு இல்லை, அக்கா! ஆனால் இந்தக் காரியம் செய்வதற்கு உன் மனம் இடம் கொடுக்கவில்லை. அதனால் தான் மனதிலுள்ளதை மறைக்கத் தெரியாமல் பைத்தியம் பிடித்தவள் போல் அலைந்தாய்!......ஆகா! பத்து வருஷத்துக்கு முன்பு நீயும் நானும் மதுரை அரண்மனையில் இருந்தபோது, என்பேரில் நீ எவ்வளவு பிரியமாயிருந்தாய்? அந்த நாளை நினைத்தாலே எனக்கு மெய் சிலிர்க்கிறது. நான் விவரமறியாக் குழந்தையாயிருந்த போதே, என் அன்னை இறந்து போனாள். பிறகு அரண்மனையில் சின்ன ராணி வைத்ததே சட்டமாயிருந்தது. தாயின் அன்பை அறியாத எனக்கு நீயே தமக்கையும் தாயுமாக இருந்து வந்தாய். அரண்மனைக்குள்ளே என்னிடம் அன்பாயிருந்தது நீதான். வெகுகாலம் வரையில் நீ என் சொந்தத் தமக்கை யென்றே எண்ணியிருந்தேன். உன் கலியாணத்தின் போதுதான், நீ என் தந்தையின் மாற்றாந்தாய் மகள் என்று அறிந்து கொண்டேன்."

வானமாதேவியின் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பொழியலாயிற்று.

"நெடுமாறா! அதையெல்லாம் இப்போது எதற்காக நினைவூட்டுகிறாய்?" என்று விம்மலுக்கிடையே வானமாதேவி கேட்டாள்.

"அவ்வளவு அன்பாக என்னிடம் இருந்தாயே? அப்படிப்பட்டவள் எவ்வாறு இவ்வளவு கொடூர சித்தமுடையவள் ஆனாய்? என்னைக் கத்தியால் குத்தியோ விஷங் கொடுத்தோ கொல்வதற்கு எவ்வாறு துணிந்தாய்?......" என்றான் நெடுமாறன்.

"தம்பி! என்னை மன்னித்து விடு!... அவர் யுத்தத்துக்குப் புறப்படும்போது இவ்விடத்துப் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்து விட்டுச் சென்றார். உன்னால் ஏதாவது இங்கே அபாயம் நேரலாம் என்றும் எச்சரித்தார். அப்படி நேராமல் பார்த்துக் கொள்வதாக நான் வாக்குக் கொடுத்தேன். ஆனால் அவருக்கு வாக்குக் கொடுத்தபோது நீ இவ்விதம் சதி செய்யப் போகிறாய் என்று கனவிலும் கருதவில்லை!" என்று சொல்லி விட்டு மறுபடியும் கண்ணீர் விடத் தொடங்கினாள்.

"அக்கா! நீ கண்ணீர் விடுவதைப் பார்க்க எனக்குச் சகிக்கவில்லை. நான் என்ன சதி செய்தேன் என்பது எனக்கே தெரியவில்லை. நீ உன் பதிக்கு என்ன வாக்குக் கொடுத்தாய் என்பதையும் நான் அறியேன். ஒருவேளை என்னைக் கத்தியால் குத்திக் கொன்று விடுவதாக வாக்குக் கொடுத்திருந்தாயானால், அதைப் பற்றிக் கவலைப்படாதே! இதோ என் மார்பைக் காட்டச் சித்தமாயிருக்கிறேன்; உன் வாக்கை நிறைவேற்று!" என்று சொல்லிய வண்ணம் நெடுமாறன் கத்தியை வானமாதேவியின் கையில் கொடுப்பதற்காக நீட்டிக் கொண்டே, தன் மார்பையும் காட்டினான்.

"தம்பி! பெருந் துக்கத்தில் ஆழ்ந்திருக்கும் என்னோடு ஏன் விளையாடுகிறாய்? நீ என்ன உத்தேசத்தோடு இப்போது வந்தாயோ, அதைச் சொல்லு!" என்றாள் சக்கரவர்த்தினி.

"அக்கா! நான் விளையாடவில்லை. உண்மையாகவே சொல்கிறேன். உன்னைப் பற்றி நினைக்க நினைக்க எனக்கு எவ்வளவோ கர்வமாயிருக்கிறது. பாண்டியர் குலத்திலே பிறந்த பெண் இவ்வளவு பதிபக்தியுடையவளாயிருப்பது மிகப் பொருத்தமானதுதான். பாண்டிய குல தெய்வமான மீனாக்ஷி தேவி, பெற்ற தகப்பனான தக்ஷனை நிராகரித்து விட்டுச் சிவபெருமானே கதி என்று வந்து விடவில்லையா? பிறந்த வீட்டாரால் புருஷனுக்கு ஏதேனும் கேடு நேர்வதாயிருந்தால், புருஷனுடைய நன்மைக்கான காரியத்தைத் திடமாகச் செய்வதுதான் பாண்டியகுலப் பெண்களின் மரபு. ஆனால் என்னால் என்ன கேடு வரும் என்று நீ சந்தேகப்பட்டாய்? எந்த விதத்தில் நான் உன்னுடைய மன வெறுப்புக்குப் பாத்திரமானேன்? அதை மட்டும் சொல்லிவிட்டு இந்தக் கத்தியை என் மார்பில் பாய்ச்சி விடு!" என்றான் நெடுமாறன்.

"தம்பி! என் வாயினால் அதைச் சொல்லியே தீரவேண்டுமா! உன்னோடு அழைத்து வந்திருக்கும் பாண்டிய சைன்யத்தைக் கொண்டு காஞ்சிநகரையும் பல்லவ சிம்மாசனத்தையும் கைப்பற்ற வேண்டுமென்று நீ சதி செய்யவில்லையா!"

"இம்மாதிரி துரோக சிந்தை எனக்கு ஏற்பட்டிருப்பதாக உனக்கு ஏன் சந்தேகம் வந்தது? யார் சொன்னார்கள், அக்கா!"



"யார் சொல்ல வேண்டும்? உன் முகத் தோற்றம், நடவடிக்கை, பேச்சு ல்லாம் சந்தேகத்தை உண்டாக்கின. வாதாபிக்குப் போவது சந்தேகம்' ன்று நீயே சொன்னாய். 'இந்த அரண்மனையிலே அடைக்கலந் தந் தால் இங்கேயே இருந்து விடுகிறேன்" ன்று கூறினாய். எப்போது பார்த் தாலும் ஏதோ ஆழ்ந்த சிந்தனையில் உள்ளவன் போல் காணப் பட்டாய். இதை யெல்லாம் தவிர நள்ளிரவில் மண சித்தர் கூட்டத்துக்குப் போய் வந்தாய். சமணர்களுடைய சூழ்ச்சியில் அகப்பட்டுக் கொண்ட பிறகு, நான் சந்தேகப் படுவதற்கு இன்னும் என்ன வேண்டும்?"

"அக்கா, வீணாகச் சமணர்களின் மீது பழி சொல்ல வேண்டாம். அவர்கள் வருங்கால நிகழ்ச்சிகள் சில வற்றை எனக்குக் காட்டியது உண் மையே. ஆனால் அவற்றிலிருந்து நான் முடிவு செய்தது நீ நினைத்ததற்கு நேர்மாறானது. மாமல்ல சக்கரவர்த்தி இங்கு இல்லாத சமயம் பார்த்து அவ ருடைய தலை நகரையும் ராஜ்யத் தையும் அபகரித்துக் கொள்ள நான் எண்ண வில்லை. 'மாமா! மாமா!' என்று சொல்லிக் கொண்டு என்னை ஓயாமல் சுற்றித் திரியும் குழந்தை மகேந்திரனுக்கு மகத்தான துரோகத் தைச் செய்யவும் நான் எண்ணவில்லை. ஆனால், இந்த அரண்மனைக்கு வந்தது முதலாக எதைப் பற்றி யோசித்துக் கொண்டிருந்தே னென்றால், எனக்கு நியாயமாக உரிய பாண்டிய ராஜ்யத்தை யும் துறந்து, உலக வாழ்க்கையையும் துறந்து திகம்பர சமணனாகி விடலாமா என்றுதான்!..."

"தம்பி! இது என்ன விபரீத யோசனை?" என்று வானமாதேவி திடுக்கிட்டுக் கேட்டாள்.

"எது விபரீத யோசனை, அக்கா! ஆறறி வுள்ள மனிதர்களைப் புலிகளாகவும் ஓநாய்களாக வும் ஆக்கி, லட்சக் கணக்கான ஜனங்கள் ஒரு வரை யொருவர் கொன்று மடிவதற்குக் காரணமா யிருக்கும் இராஜ்ய பாரத்தை ஏற்றுக் கொள்வது விபரீத யோசனையா? அல்லது புழு பூச்சிகளின் உயிருக்குக்கூட ஊறு செய்யாத ஜீவகாருண்ய மதத்தைச் சேர்ந்து கொல்லா விரதம் மேற் கொண்டு வாழ்வது விபரீத யோசனையா?"

"தம்பி! நீ மிக்கப் படித்தவன். உன்னோடு தத்துவ விசாரணை செய்வதற்கு வேண்டிய தகுதி யற்றவள் நான். ஆயினும் நீ திகம்பர சமண சந்நி யாசி ஆகிற யோசனை விபரீதமானதுதான். அதை நினைக்கும்போதே எனக்கு என்னமோ செய்கிறது!"

"என்னை நீ கத்தியால் குத்திக் கொன்றாலும் கொல்லுவாய்; ஆனால், நான் திகம்பர சமணன் ஆவதை மட்டும் விரும்ப மாட்டாய். போனால் போகட்டும். அந்தக் கவலை உனக்கு வேண்டாம். நான் திகம்பர சமணன் ஆகப் போவதில்லை. அந்த யோச னையை நேற்றுச் சாயங்காலத்தோடு கைவிட்டு விட்டேன்......"

"பின்னே, என்ன செய்ய உத்தேசித் திருக்கிறாய், தம்பி!" என்று அடங்கா ஆர்வத்துடன் பல்லவ சக்கரவர்த்தினி கேட்டாள்.

"நாளையதினம் மதுரைக்குத் திரும் பிப் போகிறேன், அக்கா! ஒரு வேளை எனக்கு அந்தச் சிரமம் கொடுக்காமல் நீ என்னைக் கொன்று விடுவதா யிருந் தால்......" என்று கூறி, மீண்டும் தன் கையிலிருந்த கத்தியை நீட்டினான்.

வானமாதேவி அவன் அருகில் வந்து அந்தக் கத்தியைப் பிடுங்கித்



தூர எறிந்தான். பிறகு, நெடுமாறனுடைய இரு கரங்களையும் பிடித்துக் கொண்டு கண்களில் நீர் ததும்ப, குரல் தழுதழுக்க, 'நெடுமாறா! இந்தப் பைத்தியக்காரியைத் தண்டித்தது போதும். இனிமேல் அந்தப் பேச்சை எடுக்காதே! உன் பேரில் நான் சந்தேகப்பட்டது பெரிய குற்றந்தான். என்னை மன்னித்துவிடு!'' என்றாள்.

"உனக்கு இவ்வளவு மனக் கலக்கத்தை அளித்ததற்காக நான்தான் உன்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். என்னை மனப்பூர்வமாக மன்னித்து ஆசீர்வாதம் செய், அக்கா!'' என்றான் நெடுமாறன்.

"கடவுள் அருளால் உனக்குச் சகல மங்களங்களும் உண்டாகட்டும். சீக்கிரத்தில் உனக்குத் தகுந்த பத்தினியை மணந்துகொண்டு நெடுங்காலம் பாண்டிய சிம்மாசனத்தில் வீற்றிருப்பாய்!...... ஆனாலும், தம்பி! என்னை ரொம்பவும் நீ கலங்க அடித்து விட்டாய்! வராக நதிக் கரையில் ஏன் நீ தங்கினாய்? திகம்பர சமண அடிகளாகும் யோசனை உனக்கு ஏன் ஏற்பட்டது? வாதாபிக்குப் போவதற்கென்று கிளம்பி வந்தவன், மதுரைக்கு ஏன் திரும்பிப்போகிறாய்? இதெல்லாம் இன்னமும் எனக்கு மர்மமாகவே இருக்கிறது'' என்றாள் வானமாதேவி.

"என் மனக் குழப்பம் அடைவதற்கு வேண்டிய காரணங்கள் இருந்தன, அக்கா! சொல்கிறேன், கேள்!'' என்று நெடுமாறன் தொடங்கிப் பின்வருமாறு கூறினான் :—

"மதுரையிலிருந்து நான் புறப்படும் போதே அப்பாவுக்கு தேக சௌக்யம் கெட்டுப் போயிருந்தது. இது காரணமாக அப்பா என்னைப் போக வேண்டாம் என்று சொன்னார். ஆயினும் மாமல்லருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றியாக வேண்டும் என்று நான்தான் பிடிவாதமாகப் புறப்பட்டேன். ஆனால் வராக நதக்கரைக்கு நான் வந்து சேர்ந்த போது மறுபடியும் மதுரையிலிருந்து ஓலை வந்தது. தந்தையின் உடல் நிலை ரொம்பவும் கவலைக்கிடமாகி விட்டதாகவும், எனக்குப் பாண்டிய சிம்மாசனம் இல்லாமல் செய்து
என் தம்பிக்கு முடிசூட்ட என் சி
றன்னை சூழ்ச்சி செய்து கொ
டிருப்பதாகவும், இந்தச் சமயம் பார்
துச் சேர மன்னன் பாண்டிய நாட்டி
மீது படை எடுக்க ஆயத்தமாயிருப்
தாகவும் செய்திகள் வந்தன. மே
காஞ்சிக்கு வருவதா, மதுரைக்கு
திரும்பிப் போவதா என்று என் மன
ஊசலாடிற்று. இந்த நிலைமையி
வருங்கால நிகழ்ச்சிகளை அறிந்
கொள்ள விரும்பிச் சமணர் குகைக்கு
சென்றேன். கிணறு வெட்டப் பூத
புறப்பட்டதுபோல் அங்கே நா
அறிந்த விஷயம் இன்னும் எ
மனதைக் குழப்பி விட்டது. மறு நா
கடுமையான சுரமும் வந்து விட்ட
சுரம் விட்டதும் அங்கிருந்து ம
ரைக்கே நான் ஒருவேளை திரும்பி
சென்றிருப்பேன். அல்லது திகம்ப
சமண சந்நியாசி ஆகியிருப்பேன்
ஆனால் நான் சுரமடித்துக் கிடந்
சமயத்தில் என் நண்பன் குலச்சிறை
காஞ்சிக்கு வந்துவிட்டுத் திரும்பினான்
அவன் வந்து சொன்ன ஒரு செய்
காரணமாகத்தான் இவ்விடம் வரு
தென்று தீர்மானித்தேன்......''


"அது என்ன செய்தி?'' என்
வானமாதேவி ஆவலுடன் கேட்டாள்

"சற்று முன்னால் அந்தச் சோ
நாட்டுப் பெண்ணைப் பற்றிச் சொ
னாயே? அவளைத் திருநாவுக்கரச
மடத்தில் பார்த்ததாகக் குலச்சிறை
சொன்னான்......''

"தம்பி! இது என்ன? அந்
வஞ்சகக்காரிக்கும் நீ காஞ்சிக்கு வந்
ததற்கும் என்ன சம்பந்தம்?'' என்
சக்கரவர்த்தினி கேட்டாள்.

"அக்கா! ஜாக்கிரதை! அந்த
பெண்ணைப் பற்றி ஒன்றும் தூஷணை
யாகச் சொல்லாதே! அவளைத் தேடி
கொண்டுதான் நான் காஞ்சி நகருக்கு
வந்தேன். அவளைப் பார்ப்பதற்காகவே
இத்தனை நாளும் இங்கே தாமதி
தேன். நேற்றுச் சாயங்காலம் அவளை
உன்னுடைய அரண்மனைத் தோட்
டத்தில் சந்தித்துப் பேசிய பிறகுதான்
என் உள்ளம் தெளிவடைந்தது. உன்
ஆசீர்வாதம் பலித்து, நான் பாண்டி
சிம்மாசனம் ஏறினால் அந்தப் பெண்
தான் என் பட்ட மகிஷியாயிருப்
பாள்!'' என்றான் நெடுமாறன்.

காந்தி திருவிழா



காந்தி மகான் விஜயத் திருவிழா தியாகராஜ நகரில் பன்னிரண்டு தினங்கள் நடந்தபோது, ஹிந்தி பிரசார சபைக் கட்டிடத்தின் முன் வாசல் எப்போது பார்த்தாலும் ஜே ஜே என்று இருந்தது.

ஹிந்தி பிரசார சபையின் பொதுக் காரியதரிசி ஸ்ரீ சத்திய நாராயணனும், பிரபல ஹிந்தி பிரசாரகர் ஸ்ரீ பாலசந்திர ஆப்தேயும் ஒரே முக மலர்ச்சியுடன் விளங்குவதற்குக் காரணம் கேட்கவா வேண்டும்?







ஸ்ரீ சத்திய நாராயணனின்
தலைமீது சுமந்திருந்
பொறுப்பு மகத்தானது
பல சமயம் அவர் போலீஸ்
உத்தியோகம் வகித்து
நலம் உத்தரவு போட
வேண்டியிருந்தது!









ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ எல். என். கோபாலசாமியோ, "இவரை ஸ்ரீ சத்திய நாராயணனின் காவலிலிருந்து மதுரைக்கும் பழனிக்கும் எப்படி அழைத்துப் போவது?" என்று ஓயாக் கவலையிலிருந்தார்.








காந்தி மகாத்மாவின் அருமைப் புதல்வியாக விளங்கி அவருக்கு இடைவிடாது அரும்பணி ஆற்றி வரும் பாக்கியம் பெற்ற டாக்டர் சுசீலா நயார், முன்னால் செல்லும் பெண்மணி.



"என்ன மாதவம் செய்தது இக்குடில்!" என்று வியக்கும்படியான அதிர்ஷ்டம் இந்த வீட்டுக்கு அடித்தது. "கணேஷ் & கோ" சொந்தக்காரரான ஸ்ரீ எஸ். சுப்பையர் அவர்களின் இந்த "மங்கள விலாஸ"த்தில் மகாத்மா பன்னிரண்டு தினங்கள் தங்கியிருந்தார்.



மதி துர்க்காபாய் அவர்
ளின் ஆந்திர மஹிள ஸபா
ஸ்தி வாரக் கற்களை
த்மா ஆசீர்வதிக்கிறார்.






தினந்தோறும் மாலையில் நடந்த பிரார்த்தனை யின்போது கூடிய ஜனத் திரள் மாமாங்கக் கூட்டத்தையும் தோற்கடிப்பதா யிருந்தது



ராஜகுமாரி அமிருத கௌரியும், ஸ்ரீமதி ஆபா காந்தியும் வழி காட்ட மகாத்மர் பிரார்த்தனை மேடைக்கு வருகிறார்.



ச்சப்த ஹோ !" என்று
ரிக்கை செய்கிருர்.

★

சென்னையில் மகாத்மா தங்கியிருந்தபோது நடந்த விசேஷ சம்பவங்களில் ஒன்று, தக்கர் பாபா ஹரிஜன வித்யாலயத்தின் அஸ்திவார விழாவாகும்.


★



மேலே, டாக்டர் அழகப்ப செட்டியார் காந்தி மகாத் வரவேற்றுப் பேசுகிறார்.

★

கீழே மகாத்மா குதா கலந்துடன் கொத்து வேலை செய்கிறார்.










உலகத்திலேயே மிகக் கீர்த்தி வாய்ந்த டயர் டிரேட் மார்க்



டன்லப் ரப்பர் கம்பெனி (இந்தியா) லிமிட்டெட்

வானசஞ்சாரம்

இசைத் தேனீ

ஜனவரி 29உ சென்னையில் பாடிய துறையூர் ராஜகோபால சர்மா கணிப்பான சாரீரம் படைத்தவர். அத்துடன் நல்ல தேர்ச்சியும், விருவிருப்பான வழியும் கொண்டவர். எனவே அவர் கானம் சென்ற வாரத்து முதல்தரக் கச்சேரிகளில் ஒன்றாயிருந்தது. மாயாமாளவ கௌளை, ராமப்ரியா, கேதாரகௌளை ராக ஆலாபனங்களும் நிரவல் ஸ்வரங்களும் வெகு தரமாயிருந்தன.

இயற்கையில் கட்டை சாரீரமாயினும் ஞான பலத்தினாலும் அபூர்வ கமக சாதக முறையினாலும் சங்கீதத்தைக் கேட்போர் பிரமிக்கும்படி எவ்வளவு அழகுபட வழங்கலாம் என்பதற்கு 31உ சென்னையில் பாடிய பத்தமடை சுந்தரமய்யரின் உயர்தரக் கச்சேரி ஓர் உதாரணமாகும். நாட்டைக்குறிஞ்சி ராகத்தை இழைப்புகளும், கார்வைகளும் அசாதாரண சஞ்சாரங்களும் கொடுத்து அலசியெடுத்தார். அத்துடன் அடாணா, பேகடா இவைகளோடு ஞானரஞ்சனி, சரஸ்வதி மனோஹரி ராகங்களையும் வெகு சாமர்த்தியமாய்க் கையாண்டார். உருப்படிகளெல்லாம் ராக பாவம் ததும்பியிலங்கின.

பிப்ரவரி 4உ திருச்சியில் 8 மணிக்குக் குறிப்பிட்ட நிகழ்ச்சிக்குப் பதிலாக எம். ஏ. கல்யாண கிருஷ்ண பாகவதரின் கச்சேரி மற்றொரு உயர்ந்த ரகமாய் அமைந்தது. நயசாரீரமும் நல்லபாணியும் கொண்டு, நிதானமாயும் பாவப்பொழிவாயும் சங்கராபரணம், ஷண்முகப்ரியா ராகங்களை வனப்பாய் வழங்கினார். 'தூக்கிய திருவடி'யில் நிரவல் ஸ்வரப்ரஸ்தாரங்கள் நேர்த்தியாயிருந்தன. அவருக்குப் பக்க வாத்யமாய் அமைந்த வயலினும் கவனத்தை யீர்த்தது.

• • •

மற்றக் கச்சேரிகளில் ஜனவரி 28உ சென்னையில் வி. சாரதா, திருச்சியில் எம். எம். மாரியப்பா இவர்களின் கானங்கள் கவனிக்கத் தக்கவை. முன்னவர் இனிய குரலில் ரொம்ப நிதானமாய், பைரவி ராகத்தை வழங்கியதோடு 'ராமாபிராம' 'கொலுவையுன்னாடே' கிருதிகளையும் நிறம்படக் கையாண்டார். பின்னவர் கணிப்பும் மதுரமும் கொண்ட சாரீரத்தில் ஆரபி, தோடி ராகங்களையும் தமிழ் உருப்படிகளையும் வெகு உருக்கமாய்ப் பாடினார்.

30உ திருச்சியில் பரூர் பி. வி. பொன்னம்மாளின் பாட்டு குறிப்பிடத் தக்கது. பூர்வி கல்யாணி, சங்கராபரணம், நாட்டக்குராஞ்சி, சக்ரவாகம் ராகங்களை நிதானமாய் அழகு படப் பாடினார்.

31உ திருச்சியில், ஆர். எஸ். மணி, நயசாரீரத்தில் சுகவழியுடன் எல்லா உருப்படிகளுக்கும் அவைகளின் ராகங்களை விடாது ஆலாபனை செய்தார். தொண்டை சற்று கட்டியதாகக் கேட்டபோதிலும் பிர்க்காவுக்குக் குறைவில்லை. காநடாப்ரியா, சக்ரவாகம், தோடி ராகங்கள் நல்வடிவங்களாயிருந்ததோடு உருப்படிகளும் ராகபாவம் நிறைந்திலங்கின.

அன்று சென்னையில் கேட்ட கல்லிடைக் குறிச்சி எஸ். லக்ஷ்மி நாராயணன் பாட்டும் பரவாயில்லை. கானடா கவனத்தை யீர்த்தது. கனசாரீரத்தை நயப்படுத்த முயன்று வருவது போல் தென்பட்டது. உதவுபடி அதிகப்பட இடமுண்டு.

பிப்ரவரி 1உ சென்னையில் பழனி ஆர். பாகீரதி, எஸ். நரஸிம்மலு, திருச்சியில் ஸ்ரீரங்கம் ஆர். ரங்கநாதன் இவர்களின் கானங்கள் தரமாயிருந்தன.

2உ சென்னையில் ஸரஸ்வதி பலராமன், மதுரமான குரலில், நிதானமாயும், படிப்படியான சஞ்சாரங்களுடனும் ஆலாபனை செய்த தோடி ராகம் வனப்பாயிருந்தது.

அன்று அதே நிலையத்தில் செங்கோட்டை எஸ். பி. கங்காதரன் கணிப்பும் நயமும் கொண்ட சாரீரத்தில் ராமப்ரியா, சாருகேசி ராகங்களையும் 'கோரினவாரு' 'ஆடமோடி கலதே' ஆகிய பழைய உருப்படிகளையும் பாடினார். உதவுபடியையும் ராக ஸ்வரூபங்களையும் மேம்படுத்த இடமுண்டு. ஆபோகி ராகம் சிறப்பாயிருந்தது.

3உ சென்னையில் ஆர். ஸ்ரீனிவாஸன், வைக்கம் ஸரஸ்வதி, திருச்சியில் டி. வி. நமசிவாயம் இவர்களின் கச்சேரிகள் கவனத்தைக் கவர்ந்தன.

4உ சென்னையில் எம். கல்பகம் வழக்கம் போல் மதுரமான குரலில் நல்ல தேர்ச்சியுடன் சாவேரியையும் 'துருஸுகா' கிருதி நிரவல் ஸ்வரங்களையும் வழங்கினார். நாட்டக்குராஞ்சி ராகமும் அழகாயிருந்தது.

அன்று திருச்சியில் பி. ராமசாமி அய்யரின் கச்சேரியும் குறிப்பிடத்தக்கது. நயசாரீரத்தில் நல்ல உதவுபடியுடன் வழங்கிய 'ஷண்முகப்ரியா' நன்றாயிருந்தது.

சக்தி நாடக சபை

வ. உ. சி. நிதி உதவி நாடகம்

சென்ற ஜனவரி 20உ மேற்படி நாடக சபையார் ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை ஞாபகார்த்த நிதிக்காக "கல்கி" ஆசிரியர் தலைமையில் உதவி நாடகம் நடத்தித் தருவதாக இருந்தனர். "கல்கி" ஆசிரியர் தேக அசௌக்கியம் காரணமாக மேற்படி தேதியில் திண்டுக்கல் போகமுடியவில்லை. இதை முன்னிட்டு உதவி நாடகம் ஒத்திப் போடப்பட்டிருக்கிறது. மறுபடியும் நடைபெறும் தேதி பிறகு அறிவிக்கப்படும்.


ஸ்டானிஸ்ட்ரீட்

கை நீட்டிய தோச

"ஊர் மட்டும் பொருமலூரா இல்லாட்டி, அந்தப் பயலை ஓடவிட்டு இல்லே பார்ப்பேன். என்னாங்கறும் நான் சொல்றது? அவன் இழுத்த இழுப்புக்கு நாமும் போயிகிட்டே இருந்தா, கொடுத்த பணத்துக்குத்தான் வகையென்ன? நமக்குத்தான் என்ன கௌரவம்? என்னாச்சும் ஒரு வழி பார்க்கணும், என்ன!" என்றார் காரக்கோட்டை மிராசுதார்.

"பார்க்கிறதென்னாங்க? நம்ம ராமபாண்டியனை அழைச்சு வைச்சு விவகாரத்தை ரெண்டிலே ஒண்ணு பார்த்திடுவோம். இந்தச் சுத்துப்பட்ட ஊர் எல்லாம் ராமபாண்டியன் தயார்தான். நீங்க சொல்றீங்களே பொருமலூர் வீரய்யத் தேவன், அவனுக்குக் கூட நம்ம பாண்டியன்தான் சிட்சை. அப்படியிருக்க, அவனையே வைச்சுப் பேசிட்டா சுலபமா காரியம் முடிஞ்சுபுடும். ஆனா, நீங்க சொல்றதுக்கு மட்டும், பாண்டியன் சரின்னு சொல்லிப்புட்டால் பாதி காரியம் முடிச்சாப் பலேதான். அதுக்குத்தான் அவனுக்குத் தோதான ஆளைப் புடிச்சு கேக்கச் சொ லணும்" என்றார் கணக்கப் பிள்ளை.

"கேக்கிறதென்ன பிள்ளை, ராமபா யன்தானே! நமக்கு ரொம்ப வேண்டி னாச்சே! நானே கூப்பிட்டனுப்பினுக் வந்துடுவான். போன வருசம்கூட இர பசு அவனுக்கு ஓட்டிவிட்டேன். மூக் மூணுத்தைம்பது போறும்.—சரி, அ கென்ன, இதோ ஆளை அனுப்பிடறே கூட்டிவரச் சொல்லி" என்றார் மிராசு

பல தீராத விவகாரத்தை வெல் லகுவாய்த் தீர்த்து வைப்பான் ராமபா டியன். ராமபாண்டியன் என்றால் அ பிள்ளையும் வாய் மூடும். அவன் சிட்சை த பொருமலூர் முழுமைக்கும். எல்லா மான ஆயுதங்களையும் எடுத்து 'சாத்திரீ'க சண்டை போடுவான். அவன் தலையிட்ட விவகாரம் தீராமல் தாகத்துக்குக் கூடச் பிட மாட்டான். மிராசுதாருக்கும் அவ கும் கொடுக் வாக்கல் அதி அவன் விஷ தில் போலீஸ் தலையிடாது!

ஜே. அனந்த விஜயம்

2

"ஜல் ஜல்" என்று சலங்கை சத்தம்
கேட்டது; மிராசுதாரின் வீட்டு முன்பு ஒரு
ில்பட்டி வண்டி நின்றது. அதிலிருந்து
குதித்தான் ராமபாண்டியன். உள்ளே
சென்றான் மிராசுதாரைக் காண.

"என்ன, ராமண்ணே! இந்தப் பொரும
ரர்ப் பயல் ரொம்ப உபத்திரவப் படுத்த
ானுங்க, ஒன்றுக்கும் கனியாமே. அவன்
ழுதிக் கொடுத்த பெர்தகப் பத்திரத்திலே
ண்ட கெடுவப்படி, மூணு வருசத்துக்கு
மலே ஒண்ணரை வருசம்கூட ஆவுது.
னா இதுவரைக்கும் ஒரு தம்பிடிகூடக்
காடுக்கலே. போன மாசம் கூடக் கண்டு
கட்டேன். "தை புறக்கட்டும்"னு சொன்
ன். இருந்தாலும் எனக்கு அதிலே நம்
க்கை யில்லே. அதனாலே எவத்துக்குக்
காண்டு வரலாம்னு யோசனை பண்றேன்.
ன்னு, அந்தப் பய பங்கும் என் கையிலே
ருந்தா வசதியா யிருக்கும். தாளடிக்க,
வைக்கப் போட — செல்லு கொண்டுவர,
துக்கும். அதுக்குத்தான் நீங்க கொஞ்சம்
ுதை முன்னே நின்னு
டிச்சு வைச்சிக்கன்னு
தலை...ஆனா, இந்த
ரு சு வெள்ளாமையும்
சர்ந்து, நம்ம பக்கமே
ர்த்துப் புடுங்க. மேக்
காண்டு ஜானே, அம்
தோ ஆனாலும் பரவாயில்லே. நல்ல கட்டுக்
காப்பான இடம். அந்தப் பயதான் ஏடா
காடம் பண்ணுவான்னு நினைக்கிறேன்.
ஹூம், அண்ணே மனசு வச்சா, அவன்
ன்னத்தே பண்றது?" என்றார் காரக்
காட்டை மிராசுதார்.

"அவன், அப்படி ஒன்றும் வம்புக்காரன்
ல்லே; இருந்தாலும் பண விசயம் பாருங்க,
னுசனைத் தூக்கியெறிஞ்சு பேசச் சொல்
ும்! எதுக்கும், நானே கேட்டுப் பாக்கி
றேன். அநேகமாக் கேப்பான். நான்கூட
வனைப் பார்த்து ரெண்டு, மூணு வருச
ாவுது. நான் கேட்டவுடன் 'சரி'ன்னு
சால்லிட்டான்னு, உங்க அதிர்ஷ்டம்தான்.
ல்லேன்னுட்டா அவன் உசிரு இருக்கிற
ரையிலும் இல்லேதான். என்ன, நான்
சால்றதுங்க? மகா சூரப் பயல்! எங்கிட்ட
யார் ஆன பயல்களிலே மகா சூட்டிக்
கயான பயலுங்க அவன்! ஒவ்வொரு
மயம் அவன் கம்பெடுத்துச் சுத்தினா எங்க
த்தியார் சிவப்பிரகாச வன்னியரைப்
போலவே இருக்கும். ஆனா இன்னி வரைக்
கும் 'அண்ணே'ன்னு சொல்லத் தவறமாட்
டான்! குடி, கூத்தி ஒன்றும் அவங்கிட்ட
காடக் கூடாது. மன்னன் வச்சான்னு
புள்ளி, அந்தத் திரிமூர்த்தி வந்தாலும் மாத்த
முடியாதுங்க. பொருமலூர் முழுமையுமே
இப்ப அவன் கையிலேதான் இருக்குதா?—
ஹூம், சரி! எதுக்கும் 'நான் கூட உங்களுக்
காகச் சிபார்சு செய்ததாகவும், இன்னும்
ஒரு வாரத்திலே பணத்தைக் கொடுத்துக்
கணக்கைத் தீர்த்துபுடு, இல்லேன்னு,
அறுப்பு ஆகாதபடி வயல்லே ஆளே உட்டு
மறைப்போம்'னு சொல்லி அனுப்பிடுங்க.
பிறகு ஆவறதைப் பாத்துக்கலாம்! என்
னமோ பண விசயம் பாருங்க. சரி, வரட்டுங்
களா?" என்றான் கைகூப்பிய வண்ணம்
ராமபாண்டியன்.

மிராசுதாரும் "சரி" என்ற தோரணை
யில் தலையை ஆட்டினார் தன்னை மறந்து.

3

பொருமலூரில் கல் வீட்டு மேலும்,
மண் வீட்டு மேலும் சூரியனின் பொன்னிறக்
கிரணங்கள் பட்டு ஜீவ
களையை எழுப்பின. கிழக்
தெரு மணியக்காரன் வீட்
டின் முன் பெருங் கூட்டம்.



"என்னுங்க, ஊர் உல
கத்திலே இல்லாத காயம்,
இதைப் போலக் கண்டு
இருக்கீங்களா? கேட்டுத்தான் இருக்
கீங்களா? எனக்காகச் சொல்லவேங்க.
நியாயப் பொதுவா, இந்த ஊருக்குத்
தான் என்ன மதிப்பு வைச்சான்?
என்னமோ எல்லோரையும் துரும்பாலே
மதிச்சுபுட்டான்! பணமிருந்தா அவனோட
இருக்கு; நம்மை என்ன செய்யுறும்? நம்ம
எல்லையிலே அடி யெடுத்து வைச்சுடுவானா?
இல்லே, கேக்கிறேன்! நல்லா வசக் கண்டு
வச்சு இருக்கான். 'எதுடா, ஊரிலே ஒரு பய
லும் இல்லே. யுத்தத்துக்குப் போயிட்டான்.
எல்லாம் பொம்மனாட்டி ராஜ்யம். நாம் இட்
டதுதான் சட்டம்'னு நினைக்கலாம். ஆனா,
என்னை ஒரு ஆளா மதிக்கிலியே! அவனைச்
சும்மா விட்டுடுவேனா? பணங்காசைச் சேராப்
பிலே சிலித் தன்ன ரொம்ப சேமாருமா?
என்னுங்க, நான் சொல்றது? நான் ஒன்றும்
வம்பு தும்புக்குப் போகலே! ஏதோ நமக்
குண்டானப்பட்ட கூழோ கஞ்சியோ குடிச்
சுட்டு, இன்னிக்குப் போச்சு, நாளைக்
கென்னன்னு கிடந்தா, 'சாரை விரு

விருந்தா மாட்டுக்காரப் பையனைத் தேட ரூப்பிலே' வந்தா?— சொம்மா உட்டுபுடவாமா மூக்கை அறுக்காமே? என்னுங்க, நிக்கிறீங்களே சிலையாட்டம்! சொல்லுங்க" என்றான் ஆவேசத்துடன் 'பொருமலூர்' வீரய்யத் தேவன்.

அவன் போட்ட கூச்சலிலே நாலு தெரு ஜனமும் பெரிய வீட்டு முன்னாலே திரண்டு வந்து நின்றது.

"என்ன தம்பி, விசயத்தைச் சொல்லாமே பொத்தாம் பொதுவிலே பேசினா எங்களுக்கு எப்படித் தெரியும்? அவசரப்படாமே பைய கீழே குந்திக்கிட்டு சொல்லு. என்ன? தலை முழுகிவிடவாப் போவுது?" என்றார் மணியக்காரக் கிழவர்.



"தலை முழுகிப்போறது மட்டுமில்லையே, தலையே போகக் கூடிய விசயமில்லே நான் சொல்லப்போறது! ஊம், நம்ம நிலத்து விசயந்தான் உங்களுக்குத் தெரியுமே; அதான் போன மாசம் காரக்கோட்டையான் கணக்குத் தீர்க்கச் சொன்னானே? அப்பவே நான் அவங்கிட்ட 'அய்யா! பொறுத்ததுதான் பொறுத்தே, இன்னும் ஒரு மூணு மாசம் ஆச்சன்னா இந்தத் தை அறுப்பு ஆயிடும். பொங்க சோ உனக்கு நெல்லை வித்துக் கொடுத்துக் கணக்கைத் தீர்த்துக் காது கிள்ளிக்கிறேன்'னு சொன்னேன். அப்ப 'சரி ஆகட்டும்'னு போன மச்சான், நாலு நாளைக்கு முன்னே ஆளை அனுப்பிச்சு 'உடனே கணக்குத் தீர்க்காட்டிப் போனா நிலத்தை எலத்திலே கொண்டு வந்து விடுவேன். இல்லேன்னா வயல்லே ஆளை விட்டு அறுக்கச் சொல்வேன்'னு சொல்லி அனுப்பிச்சாரு. அப்பக்கூட நான் 'இப்ப ஒண்ணும் அவசரப்பட்டுகிட்டு செய்துட வேண்டாம். இன்னும் முப்பது நாளும் கழிச்சு வந்து பணத்தைக் கட்டிப் பத்திரத்தைக் காதைக் கிள்ளிக்கிறேன். இல்லே, பொறுக்க முடியாதுன்னா ஏதோ மாட்டை, கன்னை வித்து ஒம் பணத்தைக் கொடுத்துடறேன். ஆனா, ஒரு துரும்பைக்கூட, நிலத்

இலேருந்து எடுக்
விட மாட்டேன்'
கண்டிச்சு சொல்
யனுப்பினேன். அ
னும் போய்ச் சொல்
லிருப்பான். என்னுங்
கேட்டுக்கிட்டே வரீ
களா? கவனமாய்
கேளுங்க. இப்ப மே
கரையிலே இருந்
பாத்தா நாலு ஆட்க
வரையிலே திரண்
வந்து வயலைச் சுத்தி
சூந்தி விருக்காளுங்
என்னடான்னு ஒ
பயலை விட்டு மாத்
வேறி பாக்கச் சொ
னேன். 'நம்ம வயல்
தான் சாமி, கப்பும்
யுமா, சூந்திக்கிட்
இருக்காங்க' ன்
சொன்னான். அ
படியே அவனை வீ
ப் படையாச்சிகிட்ட போகச் சொல்
புட்டு, அப்படியே பள்ளத்திகளை
அழைச்சுவரச் சொல்லிபுட்டு, இப்படி
குறுக்க விழுந்து நான் வாரேன். இ
னும் பல்லுகூட விளக்கலே. பல்லு
குச்சியைக்கூட அங்கேயே போட்டுட்
தான் வந்தேன். ஊம், இதுக் கென்
யோசனை? என்னண்ணே, நான் சொ
றது? நாமா ஒண்ணும் பண்ணிக்கிடே
அவனு நாயம் தவறி வந்தா? — என்
அவனுக்குப் பணமில்லியா, நாத்தியம்ப
வேலி மிராசுதாருக்கு! என்ன, வேடிக்
யாகல்ல இருக்கு! இப்படியே உட்டுட்
போனா ஏது, ஏது! பதினெட்டுப் பட்டி
விருந்த பொருமலூர் இப்பவே எட்டுப் ப
டியா யிருக்கு. இன்னும் கொஞ்சம் நான்
கழுதை தேஞ்சு கட்டெறும்பு ஆனப்பி
ஒண்ணுமே இல்லாமே போகும்! என்
பொண்டாட்டி, புள்ளே, மாடு, கன்
வீடு வாசல் எல்லாத்தையும் உட்டுட்
போக்கணக் கெட்ட பயல்கள் யுத்தத்துக்
போனுக்கா, அவன் செனைச்சுட்டா
'எல்லாம் பொம்பளே, நாம்தான் ஆம்பளே
பணக்காரன், எல்லாம் மிரட்டிபுடலாம்'
இல்லே பின்னே, என்னுங்க பேசா
இருக்கீங்களே! எம்மேலே தப்பு இருந்
சோட்டாலே அடியுங்க! நான் பட்
கிறேன்" என்று உணர்ச்சி பெரு

...னிஞன் வீரய்யத் தேவன் மணியக்கார
...ப் பார்த்து.

"அவ்வ்வா" என்று மணியக்காரர்
...யில் அடித்துக்கொண்டே, "என்ன தம்பி!
...ன் சொல்றது என்ன? நீ சொன்னு
...தான். ஆனு, நம் பக்கத்திலே எடுப்பா
...ருத்தரும் இல்லியே?...முன்னே இருந்து
...ட்க, யுத்தத்துக்குப் போயிட்டாரே காக
...த்து! அவரு இருந்தாருன்னு, ஒரு பய
...ச்சு காட்டுவானு? பொட்டிப் பாம்பாட்டம்
...டப்பான்களே! இன்னிக்கு என்னென்னு
...சொல்றுப்பலே ஒரு பயனும் இல்லே.
...ன்னே என் கண்டவன் கண்டதைச்
...ய்ய மாட்டான்? ஹூம், இனி என்ன
...ருமை வேண்டி யிருக்கு! மாசாமாசம்,
...ம் புருசனும் பணம் அனுப்புவாரு'ன்னு
...ால்லிக்கிறதே தவிர்த்து! கல்லிலேயும்
...ாறு இருக்கு, கத்தாழையிலும்தான்
...ாறு இருக்கு; அரிசிச் சோறு ஆவுமா,
...பி! ஆட்டு மந்தையாட்டம் ஒருத்தன் பின்
...லே ஒருத்தன் போனுனே தவிர்த்து,
...துடா, நம்ம நிலத்தை நீரை யார் பார்த்
...க்குவாங்க?'ன்னு நினைச்சிருந்தா போவான்
...ா, பஸ்ராவுக்கும் பாக்தாத்துக்கும்! இப்ப
...ன்தான் பொருமனூரைச் சுத்திச் சுருசா
...டக்குது? பின்னே அரிசி என் தம்பி மூனே
...ல் படிவிக்காது? ஹூம், இதுக் கெல்
...ம் வெள்ளைக்காரன் என்ன செய்வான்,
...பி? இவங்க நாயாட்டம் ஓடினு, அவன்
...டிப் போட்டுச் சோத்தைப் போடறான்.
...து கிடக்கட்டும், இப்ப என்ன செய்யணும்
...ய்யா? உன் அபிப்பிராயத்தைத்தான்
...ால்லேன்! அவன் என்னமோ அழும்பன்
...ன்; அதிலே சந்தேகமில்லே. இப்ப என்ன
...ன் சொல்றுன்
...ர்மானமா?"
...ன்று கேட்டார்
...ணியக்காரர்
...ய்யத் தேவ
...ப் பார்த்து.

"தீர்மானம்
...ன்ன தீர்மானம்,
...ப்ப என்கனத்து
...யிலே விளைச்சக்
...ந்தி யிருக்கானு
...வா, அரிவான்
...னுக்கியோட!
...கட்டிநீக்களே
...மதுவா?" என்
...ன் வீரய்யன்
...ாத்த குரலில்.

"இப்ப முடிவா நாம்தான் என்ன பண்றது? உடனே என்னதான் செய்யணும்னு சொல்லேன், உன் அபிப்பிராயத்தைப் பருபருனு!" என்றார் மணியக்காரர்.

"சொல்ற தென்னக்க! என்னைப் பத்தின வரைக்கும் அவன் ஆட்களை அப்பாலே கடத்திபுடனும். பிறகுதான் மத்த பேச் செல்லாம். அவுங்க சமாதானமா போனுலும், சண்டை போட்டுப் பார்த்துக்கிட்டாலும் சரி, விடறது இல்லேன்னு மனசை வச்சு புட்டேன்! இப்ப நான் ஒங்களைக் கேட்கிறது இதான். நான் தனியாப் போய்ச் சண்டை போட்டு, எனக்கு என்னாச்சும் ஒன்னு ஆயிடுச்சு, பிறகு ஊருக்குக் கெடுதி ரொம்ப நாளாவாது. அப்புறம் அந்தப் பயலைத் தட்டிக் கேக்கத்தான் யாரிருக்காங்க? ஆனு, இப்ப எங்கூட வீட்டுக்கு ஒரு சின்னப் பயலா வந்து, தூர நின்னுக்கூடப் போதும்! நான் ஒருத்தனே முன்னே நின்னு அந்தப் பயல்களைப் பின்னி எடுத்து விடுவேன். பின்ன என்ன, நான் சொல்றது? இங்கே நிக்கிறீங்களே, உங்க எல்லாருக்கும் தாம்மா சொல்றது. 'நாளைக்கு என்னடா பொம்மனாட்டிகளா இருந்து உட்டுக் கொடுத்துட்டாங்க; பொருமனூர் அவுங்களாலே அழிஞ்சு போச்சு'ன்னு பேர் வரக் கூடாது பாருங்க. என்னுங்க, வீட்டுக்கு இந்த மாதிரி ஒருவனு தெரிஞ்ச பையங்களா அனுப்பி வைச்சாக்கூடப் போதும்! சண்டை போடவும் வாணும், கம்பைக்கூட எடுக்க வாணும். கட்டுப்பாடுக்காகத் தூர வந்து நின்னு கிட்டு இருந்தாலே போதுங்க. பிறவு நான் பார்த்துக்கிறேன், கறுப்பையா தயவாலே! என்ன மழுமாருறீங்களே, சொல்லுங்க, நான் போக" என்று திண்ணையை விட்டு எழுந்தான் வீரய்யத் தேவன்.

பெண்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர். அவர்கள் முகத்தில் ஈயாடவில்லை. அவர்களுடைய உள்ளம் பையப் பைய விறுவிறுப்பு ஏறி, ஓடு காண ஆரம்பித்து விட்டது.





"அவன் கேக்கிறதைக் கொடுத்துத் தொலைச்சு புட்டு ஒதுக்கிப் போறதுதானே தம்பி! வீணு நமக்கு என் உவத்திரியம்? அவன் அந்தரங்கம்தான் என்ன?" என்றார் மணியக்காரர்.

"அந்தரங்கம் என்னுங்க அந்தரங்கம்! அவனுக்கு நம்ம வயலுக்கு மேக்காலே ஒரு துண்டு நிலமிருக்கு. அங்கிருந்து செல்லு நீரு ரோட்டுக்குக் கொண்டு வாதன்னு ரொம்ப சரவையா யிருக்காம். அதனாலே, என் பங்கு வயலை அடாவடியா வாங்கிப் போட்டா, 'எங்காத்து வயலுக்குப் பக்கத்திலேதானே வண்டிப் பாதை போவுது, ரொம்ப சுலுவா யிருக்கும்'னு நினைச்சுத் தான் ஆள் விடத்து துடிக்கிறான், 'பணத்தைக் கொடு, கொடு'ன்னு. இல்லாட்டி 'எழுத்துக்குவேன்! புடிச்சுக்குவேன்!'னு கச்சை கட்டறான். என், 'வைக்கத் தெரியாமே வைக்கப்போரிலே வைச்சேன் பார்!' அதுக்குத்தான். அவன் இதுவும் செய்வான், இன்னமும் செய்வான்" என்றான் வீரய்யன் தன்னை நொந்து.

"போனாப் போவுது! மேலே நூறோ, அம்பதோ வைச்சு வித்துத்தான் தொலைச்சுப் புடேன். அந்தப் பணத்துக்கு வேறெங்கனாச்சும் நல்லதா பார்த்து வாங்கிகிட்டாப் போவுது! என்ன?......என்ன தம்பி, நான் சொல்றது?" என்று வீரய்யன் தோளைத் தட்டிக் கேட்டார் மணியக்காரர்.

"சொல்றதென்னுங்க? எங்க பாட்டன், பாட்டி காலத்திலே சரபோஜி மகாராஜா கொடுத்ததாம். இவன் ஒன்றும் கையை அறுத்துக்கிட்டுக் கொடுத்துடலே! வேலையைப் பாருங்க, ஒரு பருக்கை கூ பெயர்க்க விடமாட்டேன். அவனு ஆனதைப் பார்க்கட்டும். எங்களுக் இன்னும் கொஞ்ச நேரத்திலே புரிஞ்சு காயம் ஏதுன்னு" என்று விரலால் சிட்டி யடித்து விட்டுத் திண்ணையை விட் குதித்தான் வீரய்யத் தேவன், மேட் லிருந்து குதிக்கும் சிங்கத்தைப் போல.

4

"அட, அந்த மனுசன் வழவழான் பேசிகிட்டே கிடப்பாரு, கவைக்குதவா நீ வா, தம்பி!" என்றாள் ஒரு திடகாத் முடைய பெண்.

"என்ன அக்கா! சொல்லேன், இக்க தான் சும்மா!" என்று தலையைக் கவிழ் வண்ணம் கட்டை விரலால் பூமியை கிளறிக்கொண்டே கேட்டான் வீரய் தேவன்.

"என் தம்பி, நீயும் புள்ளையா போற திலேருந்து எப்பனுச்சும் பொருமனு விவகாரத்திலே பொண்டுவோ கலக்க தைக் கேட்டிருக்கியா? பார்த்துத்தா இருக்கியா? ஹூம், பின்னே என்ன வாய் பளிச்சுதா, மாங்கா புளிச்சுதான் பேசிபுடுசீகளே, புதுமையா! அவுக என்னமோ, சண்டைக்குப் போயிட் வோன்னு, நாங்களெல்லாமா செத்து போய் விட்டோம்? இல்லியே! பின்னே கிளம்பு சுணக்காமே!" என்றாள் அந் பெண் கண்கள் சிவ சிவக்க.

"ஏ, அத்தான்! பொழுது ஏற வாசல்லே எதிரி கதவை இடிக்கிறான். க





பிக்கிட்டுக் கிடக்க நேரமில்லே. எங்களை
டு, போக!" என்றாள் வெறுப்பாக மணியக்
ாரனைப் பார்த்து இன்னொரு பெண்.

"என்னடி, மயங்கிறே? புறப்படு, சுருக்க!
யமா யிருக்கா? அப்படின்னு வாணும்!"
ன்றாள் ஒருத்தி.

"வெட்கக் கேடுதான்! உங்களுக்கிருக்கிற
கிருதானே எங்களுக்கும்? பின்னே
ன்ன ஆயிடப் போவுது, 'காச்சி' இருக்
ச்சே!" என்று ஒருவர்பின் ஒருவர் சம்மதம்
சால்லி ஆயத்தமானார்கள் புறப்பட.

மணியக்காரர் பெரிய வீட்டுத் திண்ணை
கப்பைப் பிடித்துக்கொண்டு அசடு வழிய
ன்றார். கூடி இருந்தவர்களைப் பார்த்து,
பொருமலூரார் லேசுப் பட்டவங்களா?
ன்பது ஆனை ஒரு கையாலேயே
முட்டி யெறிவாங்களே! என்னமோ,
ாமர்த்தியமா சண்டையில்லாமே, பேர்
சால்லி வாங்க! ஆ—ன்னு வார்த்தையை
ட்டுடாதே தம்பி, உனக்குத்தான் சொல்
றன். முதல்லே நம்ம மேலே ஒரு தப்பு
ருக்கக் கூடாது. அப்புறம் கறுப்பையா
ருக்கவே இருக்கான்!" என்று இரு கை
ளால் வானத்தைக் காட்டிவிட்டு, மனத் தடு
ாற்றத்துடன், "என்னமோ, இந்தக் காலே
ம் கையையும் கொடுத்த வேலாயுதம் இன்
ும் கொஞ்சம் தெம்பைக் கொடுத்தான்னு
ப்ப உங்களை விட்டுட்டு இங்கே இருப்
பனு?" என்று ஆற்றாமைப் பட்டுக்
காண்டார் மணியக்காரர்.

"நான் வரேன் அண்ணு!" என்று சொல்லி
ிட்டு வீட்டை நோக்கிக் கிளம்பினான்
ரய்யத் தேவன்.

"என் அக்கா! சின்னஞ் சிறுசுகளெல்லாம் இங்கேயே இருக்கட்டுமே, எல்லாம் எதுக்கு? நாம் எல்லாம் சேர்ந்து அறுவது பேர் போனாப் போதாது? வீணு எதுக்கு? நாயை அடிக்கக் குறுந்தடியா வேணும்? புறப்படுங்க, சல்தி!" என்று பெண்கள் ஆயத்தப்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.

"அக்கா, அக்கா! இந்த ஊசியைத் தலையிலே சொருவிடு, அக்கா!"

"இந்தக் கச்சையைக் கொஞ்சம் இழுத்துக் கட்டு!"

"அந்த மூலையிலே கிடக்கிற கூழாங்கல்லை வாரி கட்டிக்கங்கடி, ஆளுக்குக் கொஞ்சம்!"

"அக்கா, சரியா யிருக்கா? இங்கே செத்தப் பாரு!"

"சரியா யிருக்குடி, தங்கச்சி! புதுசா கேக்கிறியே, ஒன்றும் தெரியாதவளாட்டம்!"

"எனக்கு என்னடியம்மா, தெரியும்? நாங்க என்னுச்சம் சண்டை சாடி போட்டு இருந்தால்லே இதுக்கு முன்னே!"

"எய் வீராயி! உனக்குத் தெரியுமாடி, நாலு வருஷத்துக்கு முன்னே, மேங்கரை வாய்க்கால் சண்டை, எல்லாரும் போய்ச் சண்டை போட்டோமே?" என்றாள் ஒருத்தி.

"நல்லா இருக்கு, என் தெரியாமே!" என்று பல பேர் பலவிதமாய்ப் பேசிக் கொண்டு கிளம்பினார்கள்.

(அடுத்த இதழில் முடியும்.)



குதிரையின் கல்யாணம்

ராஜீ



ஒரு காட்டில் அழகான பெண் குதிரை ஒன்று இருந்தது. அந்தக் காட்டுக்கு ஒரு ஆண் சர்க்கஸ் குதிரை வந்திருந்தது. அந்த சர்க்கஸ் குதிரையையேதான் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று பெண் குதிரை தீர்மானம் செய்து கொண்டது.

பெண் குதிரைக்கு சர்க்கஸ் குதிரையை நேரில் கண்டு பேசுவதற்கு வெட்கமாக இருந்ததால் தன் எண்ணத்தைக் கடிதம் மூலமாக சர்க்கஸ் குதிரைக்குத் தெரியப் படுத்திற்று. அந்தக் குதிரை ஏற்கெனவே தனக்கு ஏற்றாற்போல ஓர் அழகான பெண் குதிரையாகப் பார்த்துக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருந்தது. எனவே பெண் குதிரையிடமிருந்து கடிதம் வரவே சர்க்கஸ் குதிரைக்குச் சந்தோஷம் தாங்கவில்லை.

"உன்னைக் கலியாணம் செய்து கொள்ளுவதற்கு முன் உன்னைப் பார்க்க விரும்புகிறேன். அழகான பெண்ணாக இருந்தால்தான் நான் கலியாணம் செய்து கொள்வதாக உத்தேசம். நீ என்னை நேரில் பார்ப்பதற்கு வெட்கப்பட்டால் உன் போட்டோ ஒன்றை உடனே அனுப்பி வைக்கவும்."

என்று சர்க்கஸ் குதிரை கடிதம் எழுதி அந்தப் பெ[ண்] குதிரைக்கு அனுப்பிற்று. ம[று]நாள் சர்க்கஸ் குதிரைக்கு பெண் குதிரையினிடமிருந்[து] ஒரு கடிதம் வந்தது. அ[தை] சந்தோஷத்துடன் வாங்கிப் படித்த[து] சர்க்கஸ் குதிரை.

"தங்கள் கடிதம் கிடைத்தது. சந்தோஷ[ம்]. என் போட்டோ ஒன்றும் கைவசமில்லை. [அ]தால் புதியதாக ஒன்று எடுத்து அனு[ப்பு]கிறேன். என்னை அழகான குதிரை என்[று] என் சிநேகிதர்கள் சொல்லுவதால் எனக்[கு]ம் ஓர் அழகான குதிரையைப் பார்த்துக் [கலி]யாணம் செய்து கொள்ளவேண்டும் என்[று] தான் ஆசை. ஆனால் தங்களை நேரில் பார்[ப்ப]தற்கு வெட்கமாக இருப்பதால் தாங்களு[ம்] தங்கள் போட்டோ ஒன்றை அனு[ப்பி] வைக்கவும்."

இந்தக் கடிதத்தைப் படித்த சர்க்க[ஸ்] குதிரை, "என் கைவசமும் போட்டோ இல்லையே? வேறு புதியதாகத்தா[ன்] போட்டோ பிடித்து அனுப்ப வே[ண்]டும்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டது. மறுநா[ள்] சர்க்கஸ் குதிரைக்கு பெண் குதிரையினிடமிருந்து ஒ[ரு] போட்டோ வந்த[து]. அது வருவதற்கு சற்று முன்புதா[ன்] சர்க்கஸ் குதிரை[யு]ம் தன் போட்டோவை பெண் குதிரைக்[கு] அனுப்பிற்று.



பெண் குதிரை[யி]னிட மிருந்து வ[ந்த] போட்டோவை பிரித்துப் பார்[த்த]வுடனே சர்க்க[ஸ்] குதிரை கோபத்[து]டன் குதித்த[து]. "இதென்ன? என்[று]

...வமானப் படுத்தவே இப் பெண்
...திரை இப்படிச் செய்திருக்கிறது"
...ன்று சர்க்கஸில் குதிப்பதுபோல்
...லே கீழாகக் குதித்தது. உடனே பின்
...நுமாறு ஒரு கடிதம் எழுதி அனுப்
...ற்று.

"பெண் குதிரைக்கு, உன் போட்டோ
...டைத்தது. அழகு அழகு என்று என்னை
...ாற்றவா பார்த்தாய்? யானைத் தலையுள்ள
...் குதிரையையா நான் கலியாணம் செய்து
...ாள்ளுவது? நீ பெண்ணாக இருந்ததினால்
...ன்னைச் சும்மா விட்டேன். ஜாக்கிரதை!

சர்க்கஸ் குதிரை."


இக் கடிதம் எழுதி அனுப்பிய பத்து
...மிஷங்களுக்கெல்லாம் சர்க்கஸ்
...திரைக்குப் பெண் குதிரையிட
...ருந்து இன்னொரு கடிதம் வந்தது.
...தைப் படித்த சர்க்கஸ் குதிரைக்கு
...ன்றுமே புரியவில்லை. அக்கடிதத்தில்,

"சர்க்கஸ் குதிரைக்கு! உங்கள் போட்டோ
...டைத்தது. உங்களுக்குத் தகுந்த பெண்
...டைக்கா விட்டால் என்னையா ஏமாற்று
...து? உங்களுக்குப் பிறக்கும்போதே ஒட்
...டைச் சிவிங்கித் தலை என்று ஏன் என்னிடம்
...ொல்லவில்லை? தாங்கள் மிகவும் அழகு
...ய்ந்த குதிரை என்று என்னை அவமானப்
...டுத்தினீரே! இத்துடன் உங்கள் சிநேகம்
...ாதும்.

பெண் குதிரை."

இக் கடிதத்தைப் பார்த்தவுடன்
...ர்க்கஸ் குதிரை "என்ன இது? என்
...லை ஒட்டைச் சிவிங்கி மாதிரி இருக்
...ன்றதா? இதில் ஏதோ தவறு ஏற்பட்
...ருக்கிறது" என்று வெகு கோபத்
...டன் போட்டோ எடுத்த நரியிடம்
...சன்றது. அதே சமயத்தில்
...பாட்டோ நரியின் கடைக்கு அந்தப்
...பண் குதிரையும் வந்திருந்தது. பெண்
...திரையைப் பார்த்த சர்க்கஸ் குதிரை
...நீதானா பெண் குதிரை?" என்று
...கட்டது. அதற்குப் பெண் குதிரை
...ஆமாம்; நீர்தானா சர்க்கஸ் குதிரை?"
...ன்று கேட்டது. 'ஆமாம்' என்று
...ர்க்கஸ் குதிரை பதில் சொல்லிய
...டன் பெண் குதிரை வெட்கத்தினால்
...லைகுனிந்தது. பிறகு சர்க்கஸ் குதிரை,
...நீதான் அழகாக இருக்கிறாயே!
...தோ உன் போட்டோ மட்டும் ஏன்
...ப்படி இருக்கிறது?" என்று போட்
...டாவைக் காண்பித்தது. உடனே
...பண் குதிரை "நீரும்தான் அழகாக
...ருக்கிறீர்! உங்கள் போட்டோ
...ட்டும் வேறு விதமாக இருப்பா
...னேன்?" என்று தன்னிடமிருந்த
...பாட்டோவைக் காண்பித்தது.

இதைப் பார்த்த 'போட்டோ கிரா பர்' நரி, பயந்துபோய் "என்னை மன்னிக்க வேண்டும். சர்க்கஸ் குதிரையைப் போட்டோ எடுக்கும்பொழுது என் சிநேகிதன் ஒட்டைச் சிவிங்கியும் வந்திருந்தது. பெண் குதிரை போட்டோ எடுத்துக் கொள்ள வந்தபோது என் சிநேகிதன் யானையும் வந்திருந்தது. போட்டோ எடுக்கும் சமயத்தில் தாங்களும் போட்டோவில் விழ வேண்டும் என்ற ஆசையில் ஒட்டைச் சிவிங்கி தன் தலையையும், யானை தன் துதிக்கையையும் நீட்டியிருக்கின்றன. அதனால் தான் இந்த விபரீதம் ஏற்பட்டுவிட்டது! போட்டோவை நானும் பார்க்காமல் கொடுத்து விட்டேன்! நீங்களும் பார்க்காமல் அனுப்பிவிட்டீர்கள்!" என்றது. உடனே சர்க்கஸ் குதிரையையும் பெண் குதிரையையும் உட்கார வைத்து நல்ல போட்டோவாக ஒன்று எடுத்துக் கொடுத்தது. பிறகு சர்க்கஸ் குதிரைக்கும் பெண் குதிரைக்கும் தடபுடலாகக் கலியாணம் நடந்தது.



சுந்தரக் குட்டி:—ஏன், அப்பா, பணக்காரர்களுக்கெல்லாம் வரி போடுவான்னு சொன்னியே, அப்படின்னா வரிக் குதிரைகிட்டே ரொம்பப் பணம் இருக்கோ? இதுக்கு ஏக வரி போட்டிருக்கானே!

காலக்ஷேபம்



ரொம்ப சரி!

பேசஞ்சர் :—ஏன் ஐயா, பஸ் கண்டக்டரே! உமக்கு எத்தனை தடவை சொல்லுவது, அதிகப் பிரயாணிகளை ஏற்றிக்கொண்டு போகக்கூடாது என்று?

பஸ் கண்டக்டர் :—பணத்திற்கு ஆசைப்பட்டு இல்லேங்க; இந்த வண்டி அடிக்கடி வழியில் நின்று விடுகிறது. அதைத் தள்ளுவதற்குச் சௌகரியமாயிருக்கும்னு அத்தனை பேரை ஏற்றிக்கொண்டேனுங்க.

—எஸ். வி.



நல்ல பையன்

ஒரு வயதான ஸ்திரீ, தன் குழந்தைகளால் துரத்தப்பட்டுத் தள்ளாமையால் மிகவும் கஷ்டத்துடன் தெருவில் நடந்து போவதைச் சினிமாவில் காட்டுகிறார்கள். அதைக்கண்ட இரண்டாவது வகுப்பிலிருந்த ஒரு ஸ்திரீ வருத்தப்பட்டுக் கண்ணீர் விட்டாள்.

அவள் பக்கத்திலிருந்த பையன், "அழாதே, அம்மா! உன்னை நான் அப்படி விடமாட்டேன்" என்றான்.

அம்மா :—என் கண்ணே! பின்னே, என்ன பண்ணுவாய்?

பையன் :—வண்டி வைத்து அனுப்புவேன்.

—ஏ. கே. ராஜாமணி.



போட்டதும் ஒன்றே!

தகப்பனார் (பையனிடம்):—இன்றைக்குப் பரீட்சையில் மொத்தம் எத்தனை கணக்கு தப்பும் போட்டாய்?

பையன் :—ஒரே கணக்குத்தான், அப்பா!

தகப்பனார் :—ஒரே கணக்குத்தானா தப்பு? பேஷ்!

பையன் :—ஆமாம்; நான் போட்டதும் ஒரே கணக்குத்தான்!

—ஏ. என். வி.



சரியான அடையாளம்!

ஒரு சிறு பெண் கடைத்தெருவில் நின்று அழுதுகொண்டிருந்தது. அதைக் கண்ட ஒருவர் "குழந்தாய்! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார்.

சிறுமி :—எங்க அம்மாவைக் காணோம்.

பெரியவர் :—உங்க அம்மா யார்? எப்படி இருப்பாள்?

சிறுமி :—எங்க அம்மா, இப்போது பக்கத்தில் என்னைப்போல ஒரு பெண் இல்லாமல் இருப்பாள்.

—எஸ். வைத்தீசுவரன்.

பேஷாய்ப் போதும்!

கதாநாயகன் (நாடகத்தில்):—எனக்கு ந[illegible] உயர்ந்த ஜாதிக் குதிரை கொடுப்பவருக்[illegible] என் ராஜ்யத்தையே கொடுப்பேன்.

ரசிகன் (குத்தலாக):—ஏன் ஒரு மட்[illegible] ஜாதிக் கழுதை கொடுத்தால் போதாதா?

கதாநாயகன் :—போதும்; மேடை மே[illegible] ஏறி வாரும்!

—வி. ராம[illegible]



மேனுக்கு வந்த விதம்!

சோமு :—என் தகப்பனார் கீழிருந்[illegible] மேனுக்கு வந்தவர்.

ராமு :—அது எப்படி?

சோமு :—முதலில் பூட்ஸ் கடை வைத்திரு[illegible] தார். இப்போது தொப்பிக் கடை வை[illegible] திருக்கிறார்.

—வி. [illegible]



கஷ்டம்!

உபாத்தியாயர் :—தேற்றுப் பரீட்சைத் தா[illegible] எப்படி?

பையன் :—கேள்விகள் ரொம்ப சுலபம் ச[illegible]

உபா :—பின், ஏன் ஒன்றும் எழுதாம[illegible] போய்விட்டாய்?

பையன் :—விடைகள் கஷ்டமாக இருந்த[illegible] சார்!

—வி. எஸ். சுந்தரராஜ[illegible]



தந்தியும் தந்தையும்!

தந்திச் சேவகன் ஒரு தந்தியைக் கொடுத்[illegible] விட்டுப் போனான். அதைப் பிரித்துப் பார்[illegible] காமு தன் மகன் ராமுவைக் கூப்பிட்[illegible] "டேய் ராமு! உன் அப்பாவிட மிருந்[illegible] தந்தி வந்திருக்கிறதடா!" என்றாள்.

ஆச்சரியத்துடன் தந்தியைப் பிரித்[illegible] பார்த்தான் ராமு. அது தன் தகப்பனா[illegible] மிருந்தே வந்திருக்கிறது என்று கண்ட[illegible] அவன் ஆச்சரியம் பன்மடங்கு அதிகரித்த[illegible] எழுதப் படிக்கத் தெரியாத தன் தாயாரு[illegible] அது எப்படித் தெரிந்தது என்பதே அவ[illegible] ஆச்சரியத்துக்குக் காரணம்.

"உனக்குத்தான் படிக்கத் தெரியாதே[illegible] அம்மா! அப்பாவிடமிருந்து இந்தத் த[illegible] வந்தது என்று உனக்கு எப்படித் தெ[illegible] தது?" என்று கேட்டான்.

"தந்தியில் எழுதியிருந்தது உன் அப்[illegible] வின் எழுத்து மாதிரியே இருந்ததுடா[illegible]" என்றாள் தாயார்.

—ரா. ஸ்ரீனிவாச[illegible]



மூன்றாவது விஷயம்!

கோபால் :—எப்போதும் எனக்கு மூன்[illegible] விஷயங்களில் ஞாபக மறதி ஏற்படு[illegible] வழக்கம். முதலாவது முகங்களை மறந்து விடுகிறேன். இரண்டாவது, பெயர்களை மறந்து விடுகிறேன். மூன்றாவது......!


கிட்டு :—மூன்றாவது என்ன?


கோபால் :—முதலில் என்ன சொன்னேன்?



—எஸ். சொர்[illegible]

805 லக்ஷம் கப் டீ







சண்டை எவ்வளவுக் கெவ்வளவு கடுமையாக இருக்கிறதோ, வாழ்க்கை சாதனங்கள் எவ்வளவுக் கெவ்வளவு மோசமாக இருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அதிகமான டீ ராணுவத்தைச் சேர்ந்த ஆண் பெண்களுக்குத் தேவையாகிறது.

தங்களால் முடிந்தவரையில் டீ சப்ளை செய்ய வேண்டுமென்பதே இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரின் ஆசை நோக்கம். பல வழிகளிலும் இந் நோக்கம் நிறைவேறி வருகிறது. வேகமாகச் செல்லும் டீ கார் மிகப்பலனளிக்கத்தக்க வழிகளில் ஒன்று.

மேற்கே எகிப்திலிருந்து கிழக்கே சக்கூன்வரை - மத்திய கிழக்கு, இந்தியா, அஸ்ஸாம், பர்மா பூராவும் - இந்த கார்கள் உற்சாகமும் உடல் சுகமும் எங்கெங்கு அதிகமாகத் தேவையோ அங்கெல்லாம் சென்று உதவியளித்திருக்கின்றன.

துறைமுகத்திலிருந்து கண்டு வரை, சண்டை நடக்குமிடமிருந்து ஆயிர மைல் தூரமுள்ள இடங்களிலிருந்து துப்பாக்கி சத்தம் கேட்கும் இடம்வரை, எங்கு தேவையிருந்தாலும், எமது டீ கார்கள் எமது போர் வீரர்களுக்கு இலவசமாக வற்றாத ஆறுபோல் டீயை உவந்து அளித்து வந்தன. 1945ம் செப்டம்பர் 30வரை டீ கார்கள் மூலமாக மட்டும் போர்டார் 805 லக்ஷம் கப் டீ இலவசமாக அளித்திருக்கின்றனர்.

எமது சேவையை ஏற்றுக்கொண்டோரின் சந்தோஷங்கள்தான் எமது கைம்மாறு.

இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு டீ கார்களின் பூரா கதையும் மிக சுவாரஸ்யமானது. "Tea at the Front" (போர்முனையில் டீ) என்ற சிறு புத்தகம் சமீபத்தில் வெளியாகியிருக்கிறது. கீழ்க்கண்ட விலாசத்தாருக்கு எழுதினால் இலவசமாக ஒரு பிரதி அனுப்புவார், கமிஷனர், இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டு, 101, கிளைவ் தெரு, கல்கத்தா.



இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது

251 TM



இந்தியத் தேயிலையில்

மிகச்சிறந்தது

மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் வெள்ளை லேபில் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ்

வெள்ளை லேபில்

நேர்த்தியான இந்திய தேயிலை

LTK 64 W

தமிழ் வளர்த்த பாவலர்களையும் புரவலர்களையும் வள்ளல்களையும் அறிமுகம் மறவாதிருக்கும் பொருட்டுக் காயல்பட்டணம் மஜ்லிஸுல் ...களது சங்கத்தார் நடத்திய கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கட்டுரையைக் கீழே பிரசுரித்திருக்கிறோம். தமிழ் வளர்த்த வள்ளல் சீதக்காதியின் பெருமையை இந்தக் கட்டுரையில் காணலாம்.

வள்ளல் சீதக்காதி

மு. அறம் வளர்த்த நாதன்

"விண்ணுக்கும் மண்ணுக்கும் பேராய்
 விளங்கும் தேவேந்த்ரனென்னும்
கண்ணுக்கினிய துரைசீதக்
 காதி கமலநிகர்
தன்னுக் கிசைந்த வதனசந்த்
 ரோதய சாமி இந்த
மண்ணுக் குள்ளே ஒளித்தான்
 புலவோர் முகம் வாடியவே"

என்று புலம்புவது யார்? ஆம், புலவர் ...முன படிக்காசர்தான்! இவர் ஏன் இங் ...னம் அரற்ற வேண்டும்? இவரது உள்ளம் ஏன் உலையிலிடு மெழுகென ...ருகுகின்றது? சித்தம் ஏன் உரலில் இடு ...பாருளெனச் சிதைகின்றது?

படிக்காசர் பொருளுக்குப் பாடும் ...ன்மையர் அன்று; காசுக்கிசைக்கும் ...ம்மையர் அன்று; அவர் ஒரு உண்மை ...ான உயிர்க்கவி. அவர் ஒரு சிவ பக்தர். ...தக்காதி ஒரு முகம்மதியர். சீதக்காதி ...ின் மறைவினால் படிக்காசருக்கு ஏன் ...இவ்வளவு அவலம்? ஏன் துக்கவயப்பட்டு,

"......இறந்து விண்போய்
...றந்தா லும்காயல்
 துரைசீதக் காதி திரும்பி வந்து
பிறந்தால் ஒழியப் புலவோர்
 தமக்குப் பிழைப்பில்லையே!"

என்று புலம்பல் வேண்டும்?

சீதக்காதி மறைந்தான்; புலவர் ஏறி...ந்த வாழ்க்கைக் கப்பல் கவிழ்ந்தது; ...றியவர் பற்றி யிருந்த பெரும்புணை ...ழ்ந்தது. கொழு கம்பு விழுந்தவுடன் ...காடி துயருற்று உழல்வது இயல்பு ...ானே! கப்பல் கவிழ்ந்தவுடன் ஏறி...ந்தோர் அலமந்து புலம்புவதில் வியப்பு ...ன்றும் இல்லைதானே!

அந்த வாழ்க்கைக் கப்பல்தான் புரவ லாகிய சீதக்காதி. இவர் இறைவனது இன்னருளால், அல்லாவின் அருட்பெருக் கால், தென் காயற்பதியில், — காயற்பட் டிலத்தில் தோன்றினார். இவ்வுண்மை, 'காயற்றுரை சீதக்காதி,' 'தேட்டாவன் காயற்றுரை சீதக்காதி' முதலிய தொடர் களால் விளங்கும். ஒரு சாரார் கீழக் கரையில் தோன்றியதாகக் கூறுவார்கள். ஆனால் பெரும்பாலாரது துணிபு முன்னை யதே யாகும். சீதக்காதி கீழக்கரையில் பல காலம் வாழ்ந்தார் என்பதும், அங்கு மணம் புரிந்து, அங்கேயே சமாதி வைக்கப்பட்டார் என்பதும் நாம் அறிய வேண்டியவை.

இவர் பெருமை வாய்ந்த சதக்கத் துல்லா லெப்பையில் பிறந்தவர். இவரது பெற்றோர் யாரெனத் தெரியவில்லை. இவரது பிள்ளைத் திருநாமம் செய்யிது அப்துல் காதிறு. இவர் வணிக மரபைச் சார்ந்தவர். மரைக்காயர் என்பது மரக் கலராயர் என்பதின் மரூஉ.

இவரது ஆசிரியர், சதக்கத்துல்லாஹ் மிகவும் பேர் பெற்றவர். மொகலாயப் பெருமன்னர் ஔரங்கசீபுக்கு இவர்பால் பெரு மதிப்பு உண்டு. இவர் பெரும் புலமை வாய்ந்தவர். இவர் வாயிலாகத் தான் சீதக்காதி ஔரங்கசீபை அறிய ஏற்பட்டது; வங்கத்தின் அதிபராகவும் சேர்ந்தது.

பின் சீதக்காதி இராமநாதபுரம் மன்னன் அவைக் களத்தில் முதல் மந்திரி யாகி, விசய ரகுநாதன் என்னும் பட்ட மும் பெற்றார். உமர்ப்புலவர் 'சீறாப் புராணம்' பாடக் காரணமாய் இருந்தவர் நமது சீதக்காதியே.

இவரது காலம் 17-ம் நூற்றாண் டாகும். பின் இவர் பெரும் வணிகரானார். காயற்பதியின் 'வணிக மன்னர்' என்னும் பெயர் பெற்றார். செல்வம் குவிந்தது.

நிதிகள் நிறைந்தன. பொன்னும் மணியும் அளவிலாது பெருகின.

மனித வாழ்வு ஒரு மறை பொருள். அதன் உண்மையை இதுவெனக் கண்டறிந்தார் ஒருவரும் இல்லை. மனிதன் யாவன்? பிறப்புக்கு முன் அவன் நிலை என்ன? இறப்புக்குப் பின் என்ன நிலை? வாழ்வின் நோக்கம் யாது? இக்கேள்விகளுக்குப் பல்வேறு அறிஞர்கள் பல்வேறு வகையில் விடைகூற முயன்றிருக்கிறார்களே தவிர, முற்றிய உண்மையை அறிந்த பாடில்லை.

'ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதிய மில்லை உயிர்க்கு'

என்பது வள்ளுவர் வாக்கு.

ஈதலும் இசை பெறுதலும் வாழ்வின் ஊதியம். ஈகை வழி இசை வருதலால் இசையே மனிதனது நோக்கம் ஆதல் வேண்டும் என்பது தெளிவு. குறள் அதிகார முறையில் ஈகைக்குப் பின் 'புகழ்' வருவது இவ்வுண்மையை வலியுறுத்தும்.

உலகத்தில் என்றும் பொன்றாது நிற்பது புகழ் ஒன்றே ஆகும். மனிதன் அழியினும், அழியாவிடினும், அவனது புகழ் அழியாது. எனவே புகழ் படைத்தவன், என்றும் அழியாத் தன்மை உடையவன்.

"இமையத்துக் கோடியர்ந்தன்ன
தம்மிசை நட்டு
தீதில் யாக்கையொடு மாய்தல்
தவத்தலையே"

(புறநானூறு)

என்ற அடிகள் இங்கு நினைக்கற்பாலன

சீதக்காதி வண்மைக்கோர் வைப்பு; அருளுக்கு உறைவிடம் ஈகைக்கு எடுத்துக் காட்டு. அவர் ஈந்தார்; இசை பெற்றார்; என்றும் அழியாதவரானார். அவர் 'இல்லையென்போர்க்கு இல்லை எனாத' 1 இதயம் படைத்தவர். 'ஏற்றவை மாற்றுமை என்னாளும் தாம் வரையாது' 2 ஈதலைத் தமது தலையாயக் கடனாகக் கொண்டார். 'இவண் என்றும் எவ்வம் உறையாது' 3 ஈந்து ஈந்து உவந்தார். 'போயாசகமென்றுரைப் பார்க்குச் செம்பொன் பிடி பிடியாய் ஓயாமல்' 4 ஈந்தார். 'செம்பொன் மாரி செங்கையிற் பொழியவே' 5 அங்கை சிவந்தது.

"காய்ந்து சிவந்தது சூரிய காந்தி
கலவியிலே
தோய்ந்து சிவந்தது மின்னார்
நெடுங்கண் தொலைவில் பன்னூல்
ஆய்ந்து சிவந்தது பாவாணர்
நெஞ்சம் அனுதினமும்
ஈய்ந்து சிவந்தது மால் சீதக்காதி
இருகரமே."

* * *

"அற்றார் அழிபசி தீர்த்தல்
அஃதொருவ
பெற்றான் பொருள் வைப்புழி"

என்னும் உண்மையை அவர் நன்கு அறி
திருந்தார் போலும்! எனவே அவர் தா
தேடிய அனைத்தையும் வறியார் வறு
யைப் போக்குதலாகிய 'பாங்கில்
போட்டு வைத்தார் அந்த வட்டியு
முதலும்தான் இப்பொழுது நிற்கும் —
என்றும் நிற்க விருக்கும் — அவர
பொன்றாப் புகழுடம்பாகும்.

உலகம் சுழல்கிறது; காலம் உரு
கிறது. கோள்களும் மீன்களும் மின்
மின்னி மறைகின்றன. எது எங்ஙன
நிகழினும் உலகம் தானே நிகழ்ந்
கொண்டேயிருக்கிறது. உலகம் உரு
னும் அது நிலைத்து நிற்கும் பெற்
உடையது. இப்பெற்றி எதனால் உண்

"உண்டாலம்ம இவ்வுலகம், இந்திர
அமிழ்தம் இயைவதாயினும் இனி
தென
தமியர் உண்டலும் இலரே; முனிவில
துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவது
அஞ்சி
புகழ் எனின் உயிரும் கொடுக்குவர்
பழி எனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர்;
அயர்விலர்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை
யானே!"

(புறநானூறு)

தமக்கென முயலாது, பிறர்க்கெ
முயன்ற நோன்றாள் மன்னர் வள்ள
சீதக்காதி. இவர் போன்றோரால் தா
இவ்வுலகம் இயங்குகிறது; நிலைத்
நிகழ்கிறது.

இவர் தமிழ் நாட்டுக்கு ஒரு மண
போன்றார்; இம்மணி என்றும் ஒளிவிட்
மிளிரும். இவ்வொளியைப் பின்பற்
நடந்து உய்வு அடைய வேண்டிய
நமது கடனாகும்.

---

* 1. பாரதம் (வில்லி) 2. நாலடியார்
திருக்குறள் 4. படிக்காசர் 5. சிலப்பதிகார

நாய் பட்ட பாடு

க. கணபதி

‘நாய் வாழ்க்கை,’ ‘நாய் படாத பாடு’ என்று வர்ணிக்கிறார்களே, அதெல்லாம் கத்தப் புரட்டு. வாழ்க்கை என்பது பாலும் சோறும் எலும்புத் துண்டும் மாத்திரமல்ல. காய்கிற வயிறும் குப்பைத் தொட்டி எச்சில் இலையும் கலந்ததுதான். சுகம் ஒரு இனத்தாருக்கு மட்டிலும் ஏகபோக உரிமை யல்ல. கஷ்டமும் அப்படியேதான். இன்பமும் துன்பமும் கலந்துதான் இருக்கிறது.

என் கதையைப் பாருங்களேன்: நல்ல இடத்தில் நாலு பேரோடு பிறந்தேன். ந துரை, பங்களாவில் பிறந்ததுமே எங்களை வெந்நீரில் போட்டுக் கொன்று விடச் சொன்னாராம். காரணமா...? அந்த வெட்கக் கேட்டை ஏன் கேட்கிறீர்கள்? அம்மா நல்ல ‘ஜாதி’யாம். அதோடு நல்ல அழகி. துரை அம்மாவுக்கு ஒரு ‘நல்ல ஜாதி’ மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தாராம். அதற்குள் அவருக்குத் தெரியாமல் ‘அப்பா’வை அம்மா ‘காந்தர்வ மணம்’ செய்து கொண்டாளாம். அப்பாவும் நன்றாக இருப்பார். ஆனால் ‘தாழ்ந்த’ ஜாதி! நான் பார்த்ததில்லை, சொல்லக் கேள்விதான். ஆகவே, தாழ்ந்த ஜாதிக்குப் பிறந்த எங்களைப் பங்களாவில் வைத்திருக்கத் துரைக்கு இஷ்டமில்லை. பட்லர் டேவிட், மற்றவர்களைக் கொன்று விட்டு என்னை மட்டும் கார் ‘ஷெட்’டுக்குப் பின்னால் ஒளித்து வைத்திருந்தார். அம்மா ரகசியமாக வந்து பால் கொடுத்து விட்டுப் போவாள். எனக்கும் அவள் கூடவே போக வேண்டுமென்று ஆசையாக இருக்கும். டேவிட் விடமாட்டார். அம்மாவும் ‘சீ’ என்பாள். ஒரு நாள் அம்மாவைக் கேட்டேன், “அப்பா எங்கே?” என்று. ‘...வன்’ என்று பதில் வந்தது. அதிலிருந்து அப்பாவைப் பற்றிய பேச்சையே நான் எடுப்பதில்லை.

என்னைப் பார்க்க ரொம்பப் பேர் வந்தார்கள். ஒருத்தர், “இது ஒரே ஜாதியில்லை!” என்றார். இன்னொருத்தருக்கு என் காது பிடிக்கவில்லை. காது என் உபயோகத்திற்கா, அவர் அழகு பார்க்கவா? வேறொருவர் வந்தார். “இது என்ன, நரி மூஞ்சி மாதிரி இருக்கு!” என்றார். என் முகம் எப்படி இருந்தால் இவருக்கென்ன? ஒருத்தர் வந்து என் நகங்களை எண்ணினார். இன்னொருவர் என்னைக் கத்த விட்டு வேடிக்கை பார்த்தார். இப்படியே எனக்குப் பெரிய ரோதனையாக இருந்தது. கடைசியில் ஒருவர் வந்தார். என்னைக் கண்டதுமே காதல் கொண்டார். ஒரு வார்த்தை சொல்லவில்லை. ஏதோ பணம் கை மாறிற்று. நானும் கை மாறினேன்.

பெற்ற தாயையும் பிறந்து வளர்ந்த இடத்தையும் விட்டுப் பிரிவதென்றால் துக்கமாகத்தா னிருந்தது. ஆனால் குழந்தைப் பருவமானதால் பரந்த உலகத்தைப் பார்க்கப் போவதும் மகிழ்ச்சியாகவே இருந்தது.

அவர் வீட்டில் நான் செல்லப் பிள்ளையாக வளர்ந்தேன். வேளா வேளைக்குப் பாலும் இதர ஆகாரமும் கிடைக்கும். ஒழிந்த நேரத்தில் அவர் என்னுடன் விளையாடுவார் குழந்தையைப்போல. அவர் மனைவியும் தங்கமானவள். என்மேல் உயிர் அவளுக்கு.

சில சமயம் அவர் வேலைக்காரப் பையனை, “அதிகப் பிரசங்கி நாயே! நன்றி கெட்ட நாயே!” என்று திட்டுவார். எனக்கு ஆத்திரமாகவும் அவமானமாகவும் இருக்கும். ஆனால் இன்னொரு சமயம், அந்த அம்மா தன் குழந்தையை, “சீ நாயே! போக்கிரி நாயே!” என்று கொஞ்சிக் குலாவி முத்தமிடும்போது, எனக்கு அந்தக் கோபமெல்லாம் பறந்து போய் உச்சி குளிர்ந்து விடும். வார்த்தையில் என்ன இருக்கிறது? அதைப் பேசுகிற பாவத்தில்தானே இன்பமும் துன்பமும் தொனிக்கிறது!

அவருக்கு ஒரு சின்னக் குழந்தை. அது மண்டி யிட்டுத் தவழ்ந்து வந்து என்னுடன் விளையாடும். பொத்துப் பொத்து என்று ஓயாமல் தன் சின்னஞ் சிறு கைகளால் என்னை அடிக்கும். ஒவ்வொரு சமயம் நானும் ஒரு தின்பண்டம் என்று நினைத்தோ என்னவோ — தன் வாய்க்கு அகப்பட்டதை—என் வால், காது இவைகளை ஒரு கடி கடித்து ருசி பார்க்கும். வலிக்காது. ஆனாலும் நான் ‘வீல்’ என்று கத்துவேன். ‘ஙி! ஙி! ஙி!’ என்று

தன் பொக்கை வாயைக் காட்டிக் கொண்டு சிரிக்கும். இந்தத் தமாஷெல்லாம் பாட்டிக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. தொணதொணவென்று என்னை ஏதாவது வைது கொண்டே யிருப்பாள். வேணுமென்றுவது அவளிடம் போவேன். "ஐயோ! சனியனே! என்மேல் பட்டுடாதே! கர்மம்; கர்மம்! நல்லவா பெரியவா யிருக்கத்தை—அதிலும் நாயை நடுவீட்டிலே வளர்ப்பாளோ! தலையிலே எழுத்து?" என்று என்னை விரட்டுவாள். ஓடியாடி விளையாடும்போது தப்பித் தவறி அவள் மேல் பட்டுவிட்டால் போதும். உடனே ஸ்நானம் செய்து விட்டு வந்து அன்று முழுதும் எனக்கு லக்ஷார்ச்சனை செய்து தீர்த்து விடுவாள்.

ஒருநாள் எஜமான் ஆபீசுக்குப்போயிருந்தார். அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். பாட்டி என்ன நினைத்தாளோ என்னமோ, ஒரு பெரிய தடியை எடுத்துக் கொண்டு வந்து என்னை விரட்டினாள். ஓடவும் மனமில்லை. அடி படவும் பயமாக இருந்தது. தெருக் கோடி வரையில் ஓடிப் போய் ஓரமாக உட்கார்ந்திருந்தேன், பிறகு அவர் வந்ததும் வரலாமென்று. அங்கே கிடந்த எச்சில் இலைக்கு 'வன்—டர்' என்று இரண்டு பேர் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். எப்படி முடிகிறது பார்ப்போம் என்று அதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன்.

"அடாடா! நல்ல நாயாக இருக்கிறதே!" என்று ஒருவர் என்னை 'லபக்' என்று வாரியெடுத்துத் தூக்கிக் கொண்டு போக ஆரம்பித்தார். தப்பிக்க வழியில்லை. வீட்டிற்குக் கொண்டு போய்க் கட்டிப் போட்டு விட்டார். எனக்கு அழுகையும் ஆத்திரமுமாக வந்தது. என்ன செய்கிறது? என் அழுகையை யாரும் சட்டை பண்ணவில்லை. விதி விட்ட வழி யென்று இருந்து விட்டேன். பாவ அவர் என்னை எங்கெல்லாம் தேடினாரோ பாட்டி மாத்திரம் பீடை ஒழிந்ததென் எனக்காக ஒரு ஸ்நானம் பண்ண யிருப்பாள்!

புது இடமும் பாதகமில்லை. அ இஷ்டம்போல் நான் நடக்கிற வரையி அவர் நல்லவர்தான். ஆனால்,—எத்த நாளைக்கு வீட்டிற்குள்ளேயே உட்கார் திருக்கிறது? எப்போதாவது வெளியே எட்டிப் பார்த்தால், தெருவோடு யார வது போனால், ஊர் உலக சமாசார விசாரிப்பதில்லையா? அதற்காகச் சற் வெளியே போவேன் இதைக் கண்டாரோ இல்லையோ—உடனே கூப்பிட்டு அ அடி யென்று பிச்சுத் தள்ளி விடுவா பிறகு எவ்வளவோ தாஜா பண்ணுவா ஆனால் அன்று முழுதும் அவரி நாடவே மாட்டேன். யாராவது வந்தா "இது ரொம்ப ரோஷமுள்ள நாய் என்று பெருமை யடித்துக் கொள்வா அடிபட்டால் ரோஷமிருக்காதா? இ தாலும் என்ன செய்கிறது? 'உதைக்கி காலை நக்குகிற பிராணி' என்று த முறை தலை முறையாக எங்கள் ஜா யன் தலையிலேயே எழுதி வைத் விட்டார்களே!

அவர் வீட்டில் எப்பொழுது பார் தாலும் கீரைத் தண்டும் கத்தரிக்காயு தான் சமையல் யாருக்குப் பிடிக்கு அதெல்லாம்! அன்றைக்குத் தீபாவளி பண்டிகை. ஏதேதோ பலகாரம் கொடு தார். எனக்கு ஒன்றும் பிடிக்கவே யில்லை மூன்றாவது வீட்டில் பண்டிகை கொண் டாடினார்கள் வேறுவிதமாக. வாசனை மூக்கைத் துளைத்தது. எனக்கு இருப்பு கொள்ளவில்லை. துணிந்து மெல் நழுவினேன். நல்ல விருந்து கிடைத்த போட்டிக்குக்கூட யாரும் இல்லை. நேர





பானதே தெரியவில்லை. சாயங்கால
ாக அவர் கூப்பிடும் சத்தம் கேட்டது.
ாபிலிருந்த எலும்பைப் போடவும்
னமில்லாமல் அதோடு போனேன்.
அவ்வளவுதான், "எலும்புப் பொறுக்கி
ாயே! வா, உன் முதுகெலும்பை
ொறுக்கி விடுகிறேன்!" என்று ஒரு
ாளி ஜலத்தை என்மேல் கொட்
ஞர். எனக்கு ரோஷம் பொத்துக்
ொண்டு வந்தது. அங்கே சற்றுக்கூட
ற்கவில்லை. திரும்பிக்கூடப் பார்க்க
ில்லை. கண்ணை மூடிக் கொண்டு ஓடி
னேன், எங்கே போகிறோம் என்ற நினைவு
ட இல்லாமல்!

அன்று மாலை 'பராக்கு' பார்த்துக்
கொண்டே கடற் கரையின் பக்கமாகப்
போனேன். ஒரே கூட்டம். ஆனால் என்னை
ஒன்றும் கேட்பாரில்லை. 'சிவனே'
ன்று உட்கார்ந்திருந்தேன். ஒரு கார்
ந்து நின்றது. அது நிறைய யார் யாரோ
இருந்தார்கள். ஒரு பையன் மட்டும்
இறங்கி வந்து மணலில் பந்து விளை
ாடினான். பத்து வயதிருக்கும். பால்
டியும் முகம். அவனை எனக்கு ரொம்
வும் பிடித்தது. என் பசியைக்கூட
றந்து விட்டேன். அவனோடு விளையாட
வண்டும்போல இருந்தது. ஓடிப்போய்ப்
ந்தைக் கவ்வினேன். அவன் என்னிடம்
டி வந்தான். அவன் அருகில் வரும் வரை
ில் சும்மா இருந்தேன். பிறகு கொஞ்ச
ரம் ஓடினேன். அங்கே பந்தைக் கீழே
வைத்தேன். அவன் வந்தான். மறுபடியும்
வ்விக்கொண்டு ஓடினேன். இப்படி
ொஞ்ச நேரம் விளையாடினோம். கடைசி
ில் பந்தை அவன் கையில் கொடுத்து
விட்டு வாலை ஆட்டிக்கொண்டு நின்றேன்,
அவன் முகத்தைப் பார்த்துக்கொண்டே.
அவனுக்கும் என்னைப் பிடித்திருந்தது.
மெதுவாக என் முதுகைத் தடவிக்
கொடுத்தான். அதற்குள், "பாலு,
பாலு!" என்று காரிலிருந்து அழைப்பு
வந்தது.

"வா, கமலி! வீட்டிற்குப் போகலாம்"
என்று பாலு என்னைத் தூக்கிச் சென்
றான் காருக்கு.

ஆமாம்; அதற்குள் அவன் எனக்கு ஒரு
புதுப் பெயர் வைத்து விட்டான்!

"ஏதுடா இது? எச்சில் பொறுக்கி
நாய். கீழே விட்டு விடு!" என்றார் அவன்
தகப்பனார்.

ஊஹூம்...... "நான் மாட்டவே மாட்
டேன்!" என்றான் பிடிவாதமாக.

"போனால் போறான்! இது கூட
யாரோ வளர்த்ததுதான்; தெரு நாயல்ல!"
என்றாள் அவன் அம்மா, அவனுக்கு அனு
சரணையாக. அவர் பதில் பேசவில்லை.
அம்மாவின் வார்த்தைக்கு அப்பீலே கிடை
யாது போலிருக்கிறது!

கார் புறப்பட்டது. வீட்டிற்குப்
போனோம். பெரிய பங்களா—தோட்டம்.
பணக்காரர்தான் போலிருக்கிறது.
எனக்குப் பால், பிஸ்கட் ஒன்றுக்கும்
குறைவே கிடையாது. ராஜபோகந்தான்.

ஒரு நாள் யாரோ ஒரு அம்மா காரில்
வந்தாள். பாலுவின் அம்மாவும் அவ
ளும் ஹாலில் பேசிக் கொண்டிருந்தார்கள்.
ஸ்திரீகள் பேச்சு தெரியாதா?—சளசள
வென்று பேசிக் கொண்டிருந்தால் தூக்
கமா வரும்? "கடவுளே!" என்று கண்ணை
மூடிக்கொண்டு படுத்திருந்தேன். பேசின
பேச்செல்லாம்—யாரோ 'டிக்கி'யாம்—
அவளைப் பற்றியேதான். "யாருடாப்பா
அந்த 'டிக்கி'?" என்று கண்ணைத் திறந்து
பார்த்தேன்.

அந்த அம்மா மடியில் சிறு பொம்மை
யைப் போல் அவலக்ஷணமாக ஒரு
சின்ன உருவம் உட்கார்ந்திருந்தது.





"இதற்குத்தானா இவ்வளவு பெருமையும் பேச்சும்?" என்று திரும்பிப் படுத்துக் கொண்டேன்! 'அவன்' அவள் மடியை விட்டுக் கீழே இறங்கி வந்தான். என்னைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ள வில்லை. "அவ்வளவு கர்வமா உனக்கு?" என்று நினைத்துக்கொண்டு எழுந்து அவன் அருகே போனேன். நம் வீட்டுக்கு வந்தவனை விசாரிக்க வேண்டாமா? என்னை மேலும் கீழும் பார்த்தான். அவன் உடல் நடுங்கியது. "பயப்படாதே! உன்னை விழுங்கி விடமாட்டேன். செவக் கிடமா, வா விளையாடலாம்" என்றேன். "நீ இருஜாதி ஜந்து! உன்னோடு விளையாட மாட்டேன்....உர்ர்" என்றான். "பாதக மில்லை; வா" என்று அவனைப் பிடித்து இழுக்க நினைத்து, அவன் கழுத்துக்குச் சமீபத்தில் மெதுவாகக் கவ்வினேன். அட, பயங்குள்ளி! ஆண் பிள்ளையாம், ஆண் பிள்ளை! யாரோ அவன் குரல் வளையைக் கடித்துக் கொலை பண்ணி விட்டது போல 'வீர்' என்று பெரிய சத்தம் போட்டுக் கொண்டு எடுத்தான் ஓட்டம்!

அவனுக்கு மேலாக அந்த அம்மா "ஐயோ! என் டிக்கி, டிக்கி!" என்று அழ ஆரம்பித்து விட்டாள். எனக்கு ரொம்ப வருத்தமாகப் போய் விட்டது. அந்த அம்மாளின் அலறலைக் கேட்டு பாலுவின் அப்பா ஓடி வந்தார் "என்ன, என்ன?" என்று. நான் டிக்கியைக் கடித்துக் கொன்று விட்டேனென்று அந்த அம்மா புகன்றாள். அவ்வளவு தான். அவர் முகத்தைப் பார்க்க வேணுமே! சுற்று முற்றும் பார் தார். மேஜையிலிருந்த 'பிளவர் வாஸ் தான் அவர் கைக்கு அகப்பட்டது. "இ ஜாதி எச்சில் பொறுக்கி நாயே! ஓ வெளியே! அவ்வளவு அகம்பாவம உனக்கு?" என்று அதை என்மேல் வீ எறிந்தார். அடிபடாமல் தோட்டத்திற் ஓடி விட்டேன். இருந்தாலும் அவர் திட் வதை நினைக்க நினைக்க எனக்கு அழுகை அழுகையாக வந்தது. யாரிடம் சொல் முடிகிறது?

பாலு வருகிற சமயமாகி விட்ட அவன் வரும் வழியைப் பார்த்து கொண்டே உட்கார்ந்திருந்தேன். அவ வந்தான். என் முகத்தைப் பார்த்ததுமே விஷயத்தை ஒருவாறு ஊகித்துக் கொண் டான். வீட்டிற்குக் கூட்டிப் போனா "முடியவே முடியாது. நான் எங் யாவது போகிறேன்!" என்று கொஞ்ச நகர்ந்து காட்டினேன். "போகாதே இங்கேயே இரு!" என்று சொல்லி கொண்டே வீட்டிற்குள் ஓடினான்.

அங்கே ஏகச் சத்தமாக இருந்த சற்று நேரத்தில் "என் கமலி வரா விட் டால் நானும் வீட்டிற்குள் வரமாட் டேன்" என்று அழுதுகொண்டே என் னிடம் வந்தான் பாலு.

எனக்கு அதைக் கேட்டதுமே அடக்க முடியாத ஆனந்தம். ஒரு பக்கம் துக்கமு கூட. பாவம், என்னால் அவனுக்கு கஷ்டம் என்று. பின்னாலேயே அப்பா வந்தார். "அழப் பிடிக்காதே! நான் ஒ நல்ல 'பெகிங்கீஸ்' வாங்கித் தருகிறேன்!" என்றார்.

"முடியவே முடியாது. எனக்குக் கமல தான் வேணும். அந்தப் 'பொம்மை நாய் வேண்டாம்!" என்றான் அழுத்தமாக.

வழக்கம்போல் அம்மா வந்தாள். "போய்த் தொலைகிறான், விடுங்கள் அவனை! வாடா பாலு!—வாடி கமலி!" என்றாள். அதற்கு அப்பீல் ஏது?

படிப்படியாக இப்பொழுது அவர்கூட என்னிடம் ரொம்ப அன்பாக இருக்கிறா எல்லோருக்கும் நான் வேண்டியவளாகி விட்டேன். வாழ்க்கையும் ரொம்ப சு மாகக் கழிகிறது.

நேற்று அம்மா மடியில் படுத்து கொண்டிருந்தேன். "நம்ம கமலிக்கு நல் ஜாதியில் ஒரு ஜோடி பாருங்களேன்!" என்றாள் அவள், பாலுவின் அப்பாவைப் பார்த்து.

"ஆகட்டும் சொல்லி வைக்கிறேன்!" என்றார் அவர்.

எப்படி என் வாழ்க்கை?

பாண்டவர்களின் வெட்கம்

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

யுத்தம் முடியும் தருவாயில் பலராமன் தீர்த்த யாத்திரை முடித்துவிட்டு குருக்ஷேத்திரம் வந்து சேர்ந்தான். அப்போது பீமனும் துரியோதனனும் மல்ல யுத்தம் செய்து கொண்டிருந்தார்கள். பீமன் துரியோதனனுடைய துடைகளை அடித்துப் பிளந்ததைப் பலராமன் பார்த்தான். யுத்த முறை புறக்கணிக்கப்பட்டு அக்கிரமம் ஓங்கி விட்டது என்று பலராமனுக்குக் கோபம் பொங்கிற்று.

"ஓ! ஓ! நாபிக்குக் கீழ் கதாயுதப் போரில் யாராவது அடிப்பார்களா? சாஸ்திர விரோதமாக இந்தப் பீமன் நடந்து கொண்டான்!"

இவ்வாறு பீமனுடைய நடவடிக்கையைப் பார்த்துப் பொறுக்காமல் பலராமன் தன் சகோதரன் கிருஷ்ணனை நோக்கி, "நீ இதையெல்லாம் பொறுப்பாய். என்னால் பொறுக்க முடியாது" என்று சொல்லிக் கலப்பையை மேலே தூக்கிக் கொண்டு பீமனை நோக்கிச் சென்றான். பலராமனுக்கு முக்கியமான ஆயுதம் கலப்பை.

பலராமன் கோபாவேசம் கொண்டு பீமன் மேல் பாயச் சென்றதைக் கண்டு கிருஷ்ணன் பயந்து வழிமறித்தான்.

"பாண்டவர்கள் நம்முடைய மித்திரர்கள். நெருங்கிய பந்துக்கள். துரியோதனனால் மிகவும் துன்புறுத்தப்பட்டவர்கள். திரௌபதியைச் சபையில் அவமதித்தபோது பீமன் சபதம் செய்தான். 'இந்தக் கதையினால் துரியோதனனுடைய இரு துடைகளையும் நான் யுத்தத்தில் பிளந்து கொல்வேன்' என்று பிரதிஜ்ஞை செய்திருக்கிறான். இது அனைவருக்கும் தெரிந்த விஷயம். செய்த பிரதிஜ்ஞையைக் காப்பாற்றுவது க்ஷத்திரிய தருமம். நம்மைச் சேர்ந்தவர்களும் தோஷமற்றவர்களுமான பாண்டவர்கள் பேரில் அவசரமாகக் கோபிக்க வேண்டாம். கௌரவர்கள் செய்த தீவினைகளையெல்லாம் வைத்துத் தருமத்தை நிர்ணயிக்க வேண்டும். நிகழ்ச்சிகளின் மத்தியில் முந்தி நடந்தவைகளை மறந்துவிட்டு ஒரு காரியத்தை மட்டும் தனியாக எடுத்துக்கொண்டு தரும விமரிசனம் செய்வது பிழையில் முடியும். இப்போது கலிகாலம் வந்துவிட்டது. வஞ்சனை முறைகளைப் பல தடவை அனுசரித்த துரியோதனனைப் பீமன் இவ்வாறு நாபிக்குக் கீழ் தாக்கியதில் குற்றம் இல்லை. இந்தத் துரியோதனனால் தூண்டப்பட்டே கர்ணன், அபிமன்யுவினுடைய வில்லைப் பின்புறத்தில் நின்று அம்பு எய்து அறுத்தான். தேரும் வில்லும் இழந்து நின்ற நிலையில் அநேகரால் தாக்கப்பட்டு அர்ச்சுனனுடைய குமாரன் கொல்லப்பட்டான். பிறந்தது முதல் வஞ்சனையில் புத்தியைச் செலுத்தின இந்தத் துரியோதனன், குலத்தைக் கெடுத்த பாவியாவான். இவன் பீமசேனனால் கொல்லப்பட்டது அதருமம் ஆகாது. சபையில் செய்த பிரதிஜ்ஞையைப் பதின்மூன்று வருஷ காலமாகப் பீமன் நினைவில் வைத்துக் காத்தான். 'துடைகளைப் பிளந்து கொல்வேன்' என்று பீமன் செய்த பிரதிஜ்ஞை துரியோதனனுக்கு நன்றாகத் தெரியும். மிகவும் துன்புறுத்தப்பட்ட பாண்டவர்களோடு யுத்தம் செய்யும் துரியோதனனுக்குப் பீமனால் இது செய்யப்படும் என்பது நன்றாகத் தெரிந்த விஷயம். இதை அக்கிரமம் என்று எண்ணக் கூடாது" என்று சமாதானம் சொன்னான்.

இவ்வாறு கிருஷ்ணன் வாதித்ததெல்லாம் பலராமனுடைய அபிப்பிராயத்தை மாற்ற முடியவில்லை. ஆயினும் அவனுடைய கோபம் தணிந்தது.

"துரியோதனன் வீரர்களுக்குரிய சுவர்க்கம் அடைவான். பீமனுடைய புகழ் மாசடைந்து விட்டது. பாண்டு புத்திரன் முறை தவறிய வழியில் துரியோதனனை அடித்தான் என்பது உலகத்தில் பெரும் பழியாக நிற்கும். நான் இவ்விடம் நிற்க மாட்டேன்" என்று சொல்லிவிட்டு, பலராமன் உடனே துவாரகைக்குச் சென்று விட்டான்.



"யுதிஷ்டிரரே! யாது காரணம் பற்றிப் பேசாமலிருக்கிறீர்?" என்றான் கிருஷ்ணன்.



"மாதவா! விருகோதரனுடைய உள்ளத்தில் நிறைந்து நிற்கும் கோபத்தையும் துக்கத்தையும் நான் அறிவேன். கீழே விழுந்த துரியோதனனுடைய தலையைப் பீமன் காலால் துவைத்தது எனக்குப் பிரியமான செய்கையல்ல. குலம் அழிந்து போவதைப் பார்க்கிறேன். கௌரவர்களால் நாம் வஞ்சிக்கப்பட்டோம். மூடனும் பேராசைக்காரனுமான துரியோதனனை இவ்வாறு கொன்றது நியாயமோ, அநியாயமோ எப்படியாயினும் மிகவும் பெரிய துக்கங்களை அனுபவித்த பீமசேனன் செய்ததை நான் ஆட்சேபிக்க முடியவில்லை" என்றான்.

தருமம் தவறினால் சமாதானங்களினால் அமைதி உண்டாகாது. மகா புத்திமானான அருச்சுனனும் பேசாமலிருந்தான்; பீமனைப் புகழவுமில்லை, குற்றமும் கூறவில்லை. ஆனால் பக்கத்தில் நின்ற மற்றவர்கள் துரியோதனனுடைய குற்றங்களையெல்லாம் எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

கிருஷ்ணன் அவர்களை நோக்கி, "க்ஷத்திரிய வீரர்களே! அடித்து வீழ்த்தப்பட்டுச் சாகும் தறுவாயில் தரையில் கிடக்கும் சத்துருவை மேலும் மேலும் இகழ்ந்து பேசுவது தகாது. மூடன் கொல்லப்பட்டான். பாவிகளுடைய சகவாசத்தை அடைந்ததால் இவன் கெட்டுப் போனான். நாம் ரதமேறிப் போய்ச் சேர்வோம்" என்றான்.

* * *

கால்கள் தரையில் உடைந்து குற்றுயிராகக் கிடந்த துரியோதனன் கிருஷ்ணன் சொன்னதைக் கேட்டுக் கோபாவேசமானான். இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக் கஷ்டப்பட்டு எழுந்து உட்கார்ந்து கிருஷ்ணனைப் பார்த்து, 'நீசனே! உன் தகப்பன் வசுதேவன் கம்சனுடைய தாசன் அல்லவா? நீ அரசர்களுடைய சகவாசம் பெறத் தகாதவன். வெட்கமில்லாமல் பேசுகிறாய். என் துடைகளைப் பார்த்து அடிக்கச் சொன்னது நீயே யல்லவா? நானும் பீமனும் சமயுத்தம் செய்து கொண்டிருந்தபோது அருச்சுனனுடன் பேசுவதுபோல் துடைகளைக் காட்டி பீமனுக்குக் குறிப்புத் தெரியும்படி நீ செய்தது எனக்குத் தெரியாது என்று எண்ணு கிறாயா? உனக்கு வெட் கமுமில்லை, தயவு மில்லை. பிதாமகர் பீஷ் மர், உன்னுடைய யுக்தி யாலே அல்லவா மாண் டார்? சிகண்டியை முன் னால் நிறுத்தி யுத்தம் செய்வித்தது நீயே. தருமபுத்திரனைப் பொய் சொல்ல வைத்து அதருமமுறையி துரோணரையும் மாய்த்தாய். யுதிஷ்டிரன் சொன்ன அசத்தியத்தை நம்பி துரோண ரைத் தம் வில்லைக் கீழே போடச்செய்தது நீயே அல்லவா? ஆயுதமின்றி யோக நிலையில் உட்கார்ந்திருந்த ஆசாரியரை அ தப்பாவியான திருஷ்டத்யும்னன் கொன் றதைத் தடுக்காமல் பார்த்துக் கொண்டு சந்தோஷப் பட்டாயல்லவா? அருச்சுன னைக் கொல்வதற்காகக் காப்பாற்றி வைத் திருந்த சக்தி ஆயுதத்தைக் கர்ணன் கடோத்கசன் மீது பிரயோகித்துச் செ வழித்து விடச் செய்ததும் உன் வஞ் சனையே யல்லவா? பாவியே! கை வெட் டப்பட்டுப் பிராயோபவேச நிலையி லிருந்த பூரிசிரவஸைச் சாத்யகி குரூ மாகக் கொன்றதும் உன் தூண்டுதல ல்லவா? உன்னாலல்லவோ கர்ணன்

சட்டசபைப் - - பிரவேசம் ஏன்?

சென்ற 24-ம் தேதியன்று காந்திஜி சென்னையில் கூடிய நிர்மாண ஊழியர் மகாநாட்டைத் திறந்து வைத்துப் பேசுகையில் பின்வருமாறு கூறினார்:

"தேசத்தின் முன் இரண்டு திட்டங்கள் இருக்கின்றன. ஒன்று நிர்மாணத் திட்டம். மற்றொன்று சட்டசபைத் திட்டம். இவற்றில் ஒன்று மற்றொன்றுக்குத் தாழ்ந்தது என்று சொல்வதற்கில்லை. ஆனால், [illegible] சத்தியத்தின் மூலமும் அஹிம்சையின் மூலமும் சுயராஜ்யம் பெற விரும்பினால், நிர்மாணத் திட்டம் அவசியம் என்பதை நான் வற்புறுத்த விரும்புகிறேன். சட்டசபைக்குப் போகிறவர்களும் அங்கே நிர்மாண வேலைகளில் பிரதான சிரத்தை செலுத்தும் பொருட்டே செல்ல வேண்டும்."

மியில் அழுந்தி விட்ட தன் தேரின்
க்கரத்தைத் தூக்கிக் கொண்டிருந்த
பாது இகழத் தக்க முறையில் அருச்
னுல் கொல்லப்பட்டான்? அயோக்
யனே! எங்களுடைய நாசத்திற் கெல்
ாம் நீயே காரணம். சிந்து ராஜனை
யத்ரதன் உன்னுடைய மாய வித்தை
ால் ஏமாற்றப்பட்டு அஸ்தமனம்
ஆகிவிட்டது என்று எண்ணி அஜாக்
ரதையாக இருந்த சமயத்தில் கொல்
ப் பட்டதை உலகம் இகழவில்லையா?"
ன்று இவ்வாறு சரமாரியாக நிந்தித்து
ட்டுத் தன் கோபாவேசத்தால் வலி
ாங்க முடியாமல் மறுபடியும் பூமியில்
ழுந்தான்.


"காந்தாரி புத்திரனே! கோபத்தால்
யிரை வீணுக எரித்துக் கொள்
ருய். உன்னுடைய பாபங்களே உன்
ாசத்துக்குக் காரணம். நான் அல்ல.
ன்னுடைய தோஷத்தினுல்தான் பீஷ்ம
ம் துரோணரும் உயிரை இழந்து மாண்
ார்கள். அவ்வாறே கர்ணனும் மற்றவர்
ளும் உன்னுலேயே மாண்டார்கள். நீ
ாண்டு புத்திரர்களுக்குச் செய்த அநியா
ங்களை யெல்லாம் எடுத்துச் சொல்ல
வண்டுமா? அவர்களையும் குந்தியையும்
ஞ்சனை செய்து நெருப்புக்கு இரை
ாக்கப் பார்த்ததை நீ மறந்தாயா?
திரௌபதியை அவமானப்படுத்தியதற்கு
எந்தத் தண்டனைதான் அதிகமாகும்? நீ
செய்த தீமைகளின் காரணமாக உண்
டான பகையும் கோபமும் எவ்வாறு
மற்றவர்களின் குற்றமாகும்? நாங்கள்
செய்த வஞ்சனைகள் எல்லாம் நீ செய்து
வந்த மகா பாபமான காரியங்களினுல்
அனுஷ்டிக்க வேண்டியதாயின. லோபத்தி
னுல் நீ செய்த பாபங்களின் பயனை யுத்த
பூமியில் அனுபவித்தாய். ஆனுல் வீரனைப்
போல் மாண்டாய். க்ஷத்திரியர்களுக்குரிய
சுவர்க்கத்துக்கு ஏகுவாய்" என்றுன்
கிருஷ்ணன்.

"அச்சுதனே! நண்பர்களோடும் உற
வினர்களோடும் நான் சுவர்க்கம் போகி
றேன். நீங்கள் துக்கத்தில் மூழ்கி உயி
ருடன் இருப்பீர்கள்" என்றுன் துரியோ
தனன்.

மறுபடியும் ஆகாயத்திலிருந்து துரியோ
தனன் மேல் பூமாரி பொழிந்தது. கந்தர்
வர்களின் வாத்தியமும் முழங்கிற்று.
திசைகள் எல்லாம் ஜோதி மயமாக
விளங்கிப் பிரகாசித்தன. இதைக் கண்டு
வாசுதேவனும் பாண்டவர்களும் ஓரளவு
வெட்கம் கொண்டார்கள்.

"துரியோதனன் சொன்னது உண்மை.
வஞ்சனையின்றி நீங்கள் அவனை ஜயித்
திருக்க முடியாது" என்றுன் கிருஷ்ணன்.

டிராமில் கேட்டது



"பையன் என்ன மடியில் படுத்துக் கொண்டு விட்டான்?"
"அதை ஏன் கேட்கிறீர்கள்? 'ஏண்டா பட்டப் பகலில் உட்கார்ந்த படி தூங்கி வழிகிறாய்?' என்று கேட்டேன். அதன் பலன், உடனே என் மடியில் படுத்துக் கொண்டு தூங்குகிறான்!"

அடித்துத்துவைப்பதனுலுண்டாகும் நாசத்தை
நீங்கள் தடுக்கலாம்
...துணிகளை இப்படிச்சலவை செய்யுங்கள்

1





2



நீங்கள் விளைவிக்கும் மிகப் பா வழக்கத்தில் துணிகளை அடித் துவைத்துச் சலவை செய் லும் அனுவசியமான—சில சம அதிகப் பணச் செலவிற்குரிய நஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. கள் குடும்பத்தில் ஒருவரோ லது உங்கள் நண்பர்களில் ஒ ரோ இதைப்பற்றி புகார் செ யாத ஒரு வாரமாவது சும்மா க் கழிந்ததென்பது சந்தே

ஆம், உண்மை. கீழே தெளிவாகக் காட்டப்பட்டுள்ள விவரங்களையும், நம்பரிடப்பட்ட படங்களையும் கவனித்து அவற்றின்படி நீங்கள் நடப்பீர்களானால், துணிகளுக்கு யாதொரு சேதமுமின்றி அவற்றை மிகமிகத் தூய்மையாகச் செய்துகொள்ளலாமென்பது நிச்சயம்.

(1) சலவை செய்யவேண்டிய உடையை நன்றாக நனையுங்கள்—குழாய், தொட்டி, குளம், ஆறு அல்லது ஓடை ஆகிய இவற்றை நீங்கள் உபயோகிக்கலாம். அதனால் யாதொரு வித்தியாசமும் இல்லை.

(2) நன்றாக உடை நனைந்தபிறகு, ஸன்லைட் சோப்பை அதன்மீது முழுவதும் தேயுங்கள். (அழுக்கேறின பாகத்தில் ஸன்லைட்டைத் தாராளமாகத் தடவவும்).

(3) சோப் உடை முழுவதும் பரவ கசக்கவும் (சப்பாத்தி செய்ய மாவை எப்படி நீங்கள் பிசைவீர்களோ அப்படிச் செய்யவும்). துணியின் இழையில் சோப் நுரை படும்படி அதை முழுவதும் கசக்கிப் பிழியுங்கள். முரட்டுத்தனமாக துணியைத் தோய்க்

3 **4**



கவேண்டிய அவசியமே இல்லை. அழுக்குள்ள இ களிலெல்லாம் நுரை படும்படி தேய்த்துக் க லும், ஸன்லைட்டின் சுயமாக வெளுக்கும் நுரை னது அழுக்கையும் மெதுவாகப் போக்கிவிடும். சக்திவாய்ந்த நுரையிலுள்ள "ஜிரந்த" பட்டமாத்திரத்தில் ஆடையிலுள்ள அழுக்கு இப்போய் நுரையிற் சேர்ந்துவிடுகிறது. ஆ லே, துணியை நுரையிலிருந்து அலசிக் க போதே அழுக்கையும் நீங்கள் அகற்றிவிடுகிறீ

(4) அழுக்கு இப்பொழுது அடங்கியிருக்கிற நு யை ஆடையிலிருந்து போகும்படி நன்றாக அ சுத்தம் செய்யுங்கள்.

இந்த மிருதுவான ஸன்லைட் முறைப்படி ணிகளை சலவை செய்தால் அவை வெகு கால நீடித்துவரும்.

ஸன்லைட் சோப்
துணிகளைப் பாதுகாக்கிறது



S. 75-23 TM

LEVER BROTHERS (INDIA) LIMI

ஏதோ புதியது - ஏதோ மாறுபட்டது




அச்விினி

டாப்பிகள் (Toffees) — காரமல்கள் — அதிகப் படி காரமான பெப்பர்மின்டுகள் — ஆஸிட் ட்ராப்புகள் (Acid Drops) — பலவகைகளாகச் செய்த பெப்பர்மின்டுகள் — ஷுகர் கோட்டெட் பதாம், பின்நாக்கள் — ஜுஸிய ஷுகர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஷுகர் மில்ஸ் கம்பெனி லிமிடெட், ஹமீரா, கபுர்த்தாலா ஸ்டேட்

சென்னை, ஜெபக்கல் பிரதர்ஸ் (இந்தியா) லிமி

21, லிங்க செட்டி தெரு, த.பெ. 21, மதராஸ்.



Firestone

பயர்ஸ்டோன்

கம்-டிப்பிடு

அதிக மைல்கள்

ஓடி உழைக்க

F. 7/47

ஸிரோலின் 'ரோச்'

இருமல் ஜலதோஷத்திற்கு



மனிதர்களே!..

ருமஆரோக்கியத்திற்கு

ரெக்ஸோனுவை

உபயோகியுங்கள்

THE NEW Rexona MEDICATED SOAP

Rexona

இப்பொழுது! ஏராளமான நுரை நிறைந்த மணம்

ந்திரிகளுக்குத்தான் முக வசீகரத்திற் கேற்றது ரெக்ஸோனு சோப்பென்று அவசரப்பட்டு எண்ணிவிடாதீர்கள். சரும-ஆரோக்கியத்தை உயர்வாகக் கருதும் ஒவ்வொருவருக்கும் அது ஒரு முக்கிய டாய்லெட் சோப்பாகும். மனிதர்கள் சிறப்பாய் அனுபவிக்கிற நேர்த்தியான, மனதிற்குகந்த, உற்சாகத்தை அளிக்கும் சோப் அதுதான். இந்த நேர்த்தியான, சுகமைவாய்ந்த, விரைவில் நுரையை உண்டாக்கும் சோப்பின் ஒரு சிறந்த தன்மை என்னவென்ருல், சுகத்தை அளித்து, சரும வியாதிகளைப் போக்கும் கிருமி நாசினியாகிய கேடில் என்னும் மருந்து அதில் சேர்க்கப்பட்டிருக்கிறது. ரெக்ஸோனுவின் ஏராளமாய் விரைவிலேற்படும் நுரை வெகு சீக்கிரத்தில் ஆரோக்கியத்தை அளிக்கும் கேடில் என்னும் மருந்தை உங்கள் சருமத்தின் ஒவ்வொரு அடிப்பாகத்திலும் கொண்டுபோய்ச் சேர்க்கிறது. அங்கேதான் சரும உபத்திரவங்களும், சரும மாசு மறுக்களும் அதிகமாய் அடிக்கடி உண்டாகின்றன. இவ்விதமாக, உங்கள் சருமம் முழுவதும் சுகமடைந்து, சுத்திசெய்யப்பட்டுத் தூய்மையையும் அடைகிறது.

ரெக்ஸோனுவை ஒழுங்காக உபயோகித்தால், எவ்வளவு எளிதாக சரும-ஆரோக்கியம் விருத்தியாகுமென்றும், முழுச் சரும-ஆரோக்கியத்தைப் பாதுகாக்கக் கூடுமென்றும் நீங்கள் இதிலிருந்து அறியலாம். ஆகையால், இந்தச் சுகமை வாய்ந்த விரைவில் நுரையைத் தரும் மருந்திடப்பட்ட சோப்பை உபயோகிக்க இன்றே ஆரம்பியுங்கள். அதை உபயோகித்துக்கொண்டே இருங்கள்.

குறிப்பு:—சரும அழகிற்குச் சரும சுகமே அடிப்படை யென்கிற விஷயம் ஞாபகத்தில் வைக்கக்கூடிய ஒரு உண்மையாகும். தன் சருமம் அதிக நேர்த்தியானதென்று ஒரு ஸ்திரீ எவ்வளவு பெருமை பாராட்டிக் கொள்ளுகிறுளோ அவ்வளவு உரிமை ஒரு மனிதனுக்கும் உண்டு.

★ ரெக்ஸோனுவிலுள்ள கேடில் ஒப்பற்ற கிருமி நாசினியாகிய ஒரு களிம்பு மருந்து. சரும சுகத்திற்கு அதிக சக்தி வாய்ந்தது. குணமளித்துப் போஷிக்கும் தைலம் சேர்ந்தது. சுகத்தைத்தந்து காப்பாற்றும் தன்மையுள்ள கேடில் யாவராலும் மதிக்கப்பட்டு விஞ்ஞானிகளால் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது.

ரெக்ஸோனு ஆயின்ட் மெண்டை உபயோகியுங்கள். வெட்டுக்காயங்கள், புண்கள், கட்டிகள், கரப்பான், ரணங்கள், முகப்பருக்கள், அரிப்புகள், சிரங்குகள், கடிகள், மசமறுக்கள் முதலிய எல்லா சரும வியாதிகளுக்கும் ரெக்ஸோனு ஆயின்ட் மெண்டை உபயோகியுங்கள்

RP. 36-20-40 TM

REXONA PROPRIETARY LIMITED

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Pre[ss]
116-119, Sladens Garden, Poonamallee High Road, Kilpauk, Madras.

கல்கி



LKI பிப்ரவரி 10. 1946

4 அணா

ஜம்மியின் " லிவர்க்யூர் "

குழந்தைகளின் சால் குலைக் கட்டி வியாதிகளுக்கு

அறிவிப்பு

எங்கள் வைத்திய நிபுணர், கீழ்க்கண்ட இடங்களுக்கு விஜயம் செய்வார். குழந்தைகளின் சால் குலைக் கட்டி வியாதிகளை நேரில் காண்பித்து யோசனைகள் கேட்டுக் கொள்ளலாம்.

நேரம்: காலை 8 முதல் 11 மணி வரை மாலை 4 முதல் 6 மணி வரை

ஸ்ரீவில்லிப்புத்தூர் :	10—2—46	ஸ்ரீ ஏ. எம். விஸ்வநாத ஐயர், பாத்திர வியாபாரம்.
தென்காசி :	11—2—46	மெஸர்ஸ். மெடிகல் ஸ்டோர்ஸ்.
திருவனந்தபுரம் :	13 & 14—2—46	மெஸர்ஸ். வி. அருணாசலம் & கோ., புதன் சந்தை அல்லது மெஸர்ஸ். எம். வி. கணபதி ஐயர் & சன்ஸ், ஆத்தக்குளங்கரை.
திருநெல்வேலி :	16 & 17—2—46	சந்திர விலாஸ் ஹோட்டல்.
நாகர்கோவில் :	18—2—46	எ. சுப்பிரமணிய ஐயர், ஜெனரல் மர்ச்சண்ட்.
தூத்துக்குடி :	20—2—46	மெஸர்ஸ். தூத்துக்குடி மெடிகல் ஹால்.

ஜம்மி வெங்கட்ரமணய்யா & சன்ஸ்

மயிலாப்பூர் :: மதராஸ்

Gordo-Car. (For Cars, Chromium lining of Car, Cycles, Safes, Etc.)

Arrests corrosion, maintains polish. The best shine for chromium lining of Car, Cycles, Safes, Boxes, Etc.

Re. 1/- per tin of obout $\frac{3}{4}$ oz.

Gordo-Film. (For Films, Film protector and heat resisting.)

Carbon action ensures strength to resist heat and keeps Film spotless and clean.

Rs. 4/- per tin of about 1 oz.

Gordo-Glashine. (For Car windscreen, Glasses, Mirrors and spectacles.)

Cleans glasses with high polish. Does not allow mist on glasses. Highly useful for motorists, Railways, Hotels and Household purposes.

Rs. 2/- per tin of about 1 oz.

Trade discount 12½% on one dozen tins. Packing and Postage free for one dozen tins.

Trade Enquiries Invited :

The S. I. T. E. Co. (Madras) Ltd.,

64, Mint Street :: P. T. Madras

Grams : "SITECOMPY" Phone : "2417"

சைபால் (Regd) CIBOL

முகப்பரு, சேத்துப் புண், சிரங்கு, வேனல் கட்டி, தீப்பட்ட புண், கரப்பான் முதலியவைகளுக்கு கைகண்ட மருந்து

•

அயோடிசால் (Regd) IODISAL

ரத்தத்தைச் சுத்தி செய்து தேகத்திற்கு
ஆரோக்கியத்தைக் கொடுக்கும்.

பாட்டில் 1-க்கு விலை ரூ. 2—0—0

•

பேபி - கிரைப் BABY - CRIPE

குழந்தைகளுக்கு உண்டாகும் வாயு, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, அஜீரணம், மாந்தம், பல் முளைக்கும்போது ஏற்படும் வயிற்றுப்போக்கு, முதலிய சகல வியாதிகளையும் போக்கி நல்ல ஆரோக்கியத்தையும் தரும் சிறந்த திராவகம்.

•

தயாரிப்பவர்கள் :

தி சௌத் இந்தியன் மானுபாக்சரிங் கம்பெனி, மதுரை

மதராஸ் ஸிடி, நெல்லூர், ஸீடெட், விசாகப்பட்டணம்
ஜில்லாக்களுக்கு ஏஜண்டுகள் :

ராஜன் ட்ரக் ஸ்டோர்ஸ், கெமிஸ்ட்ஸ், பி. டி. மதராஸ்

குண்டூர், கோதாவரி, கிருஷ்ணா ஜில்லாக்களுக்கும்
நிஜாம் சமஸ்தானத்திற்கும் ஏஜண்டுகள் :

சீதாராம ஜெனரல் ஸ்டோர்ஸ், பெஜவாடா

மைசூர் சமஸ்தானத்திற்கு ஏஜண்டுகள் :


சேஷமஹால் பார்மஸி, பெங்களூர் ஸிடி

Regd. No. M. 4392





சார்லீஸ்
டின்னர்
பிஸ்கட்ஸ்



Charley & Co., USILAMPATTI

MADRAS BRANCH : 158. POONAMALLEE HIGH ROAD, KILPAUK.

AGENTS FOR NILGRIS : MESSRS. BRILLIANT TRADERS, OOTACAMUND.